1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

# சத்தியவேத பாதுகாவலன்

Telephone:
NO. 100

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 12-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு பங்குனிமாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை— பிரதிசதம் 10

## அருமைப் பிரதமர் அந்தோ! மறைந்தனர்!!

எமதுநாட்டின் மிகப்பெருமைவாய்ந்த சரித்திரத்திலே நிகழும்பங்குனிமாதம் 22-ந் திகதி சனி வாரமானது பெரிதும்அங்கலாய்ப்பும், ஆழ்ந்தகவலையும்தருவதான ஓர்அமங்கலதினமாகும். ஏனெனில், இலங்கைமக்களின் இதயத்திலே ஓர்கணிசமானஸ்தானத்தை வகித்திருந்த—மக்கள்அனைவரினதும் மரியாதையையும், பாராட்டுதலையும்சட்டி மங்காப்புகழ் பெற்றிருந்த — நாட்டுக்குச்சுதந்திரம் பெற்றுத் தந்த பெருந்தியாகபுருஷர் மரணத்திரையில் மறைந்த தினம்அதுவாகும். இலங்கைமக்கள் சமயசுதந்திர முதலாம் சகலசுதந்திரங்களையும்பெற்றுச் சமாதானமாகவும், சுபீட்சமாகவும், உலகின் சுதந்திரநாடுகளிடையே சமஅந்தஸ்துடையோராகவும் திகழும்படியாகச் சனநாயக வாழ்க்கைத்துறையிலே தீர்க்கதிருஷ்டியுடன் சாதுரியமாகவும், சேனநாயகமாகவும் முன்னணியில்நின்று அவர்களைக் கண்ணியமான முறையில் வழிநடாத்திவந்த அரும்பெருந்தலைவர் — அருமைப்பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகஅவர்கள் அந்தோ! காலஞ்சென்றதினம் அதுவாகும்.

சுதந்திரம்பெற்ற ஸ்ரீலங்காவின் முதற் பிரதமராய், அதன் பெருமைவாய்ந்த தவப்புதல்வர்களில் ஒருவராய், உண்மையான ஓர் தேசப்பிதாவாய், ஒப்பற்ற தியாகியாய், பெருந்தலைவராய், சமயசாகிய பேதமின்றியே மக்கள்சகலரினதும் அன்பையும், நன்மதிப்பையும் அதிகமாகப் பெற்றவராய், பொதுவாகச் சொல்லுமிடத்து இலங்கையின் முடிசூடாமன்னராய் விளங்கியிருந்தவரான திரு. டி. எஸ். சேனநாயக அவர்களின் எதிர்பாராத மரணத்தாலே இன்று அகில இலங்கையும் மாத்திரமல்ல, ஓரளவில் அகிலஉலகமுமே கவலையெனும் கார்மேகம் கவியப்பெற்றதாய்க் கலங்காநிற்கின்றது. மின்னமல் முழங்காமல் கருமம் நிகழ்ந்தவாறாய் அவர் மரணத்தைப்பற்றி அறியவந்தமக்கள் கவலையில் ஆழ்ந்து, கண்கலங்கிக் கண்ணீர்உகுத்துத் "தேசப்பிதா மறைந்துவிட்டார். இலங்கையானது மாபெரும் அரசியற் தலைவரை இழந்துவிட்டது" என்று பிரலாபித்தனர். சகல சமூகத்தினராலும் கௌரவிக்கப்பெற்றுவந்த அவரைப் போன்ற ஓர் அரசியற்தலைவரை இனிமேல் இலங்கைபெறுவது சுலபமல்லஎன்று ஆழுத்தியருடன்கூறினர். அவர் நமதுகண்களுக்கு மறைந்தபோதிலும் நமதுகையில் அவர் நம்பிக்கையுடன் விட்டுச்சென்றிருக்கும் இலங்கையின் சுதந்திரம் நிலைபெறுகிறவரையிலே எங்களதும், எங்கள் சந்ததியினதும் உள்ளங்களிலே அவர் என்றைக்கும் உயிர்வாழ்ந்துகொண்டிருப்பார் என ப் பெருமூச்செறிந்து உரைத்தனர். நவலங்காவின் சிருஷ்டிகர்த்தாவான அவர் ஆசியமுன்னணி வீரர்களில் ஒருவர்; அவரது ஆட்சியின்கீழ் குழப்பமேயில்லாத ஒரு நாடாக இலங்கை திகழ்ந்து வரலாயிற்று; அவர் மரணத்தாலே ஆசியாக்கண்டம் ஓர்பெரும் அரசியல் ஞானியை — ஓர் பெருந்தலைவரை இழந்துவிட்டது என்று அனுதாபத்துடன் சாற்றிநின்றனர். இலங்கையின் நாலா பகுதிகளிலுமுள்ள சங்கங்கள், சமூதாயங்கள், தாபனங்கள் ஆதியனவெல்லாம் கூட்டங்கள்கூடி மறைந்த பிரதமருக்கு மரியாதை செலுத்துமுகமாக இருநிமிஷநேரம் மௌனமாகத்து அனுதாபந்தெரிவித்துக்கொண்டன. மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணிமுதல் உலகெங்குமுள்ள அரசாங்கத்தலைவர்கள், பிரதமர்கள், வெளிநாட்டுமந்திரிகள், ஸ்தானீகர்கள், சமயஸ்தாபனத்தலைவர்கள், மற்றும் பிரமுகர்கள் ஆதியோர்பலரும் ஆற்றொணாத் துன்பினராய் அனுதாபசெய்தி அனுப்பியிருந்தார்கள்.

பிரதமர்சேனநாயகஅவர்கள் சுதந்திர இலங்கையின் சிற்பியென்றுகூறுவது சற்றேனும் மிகையாகாது. பெரிய பராக்கிரமவாகு மன்னருக்குப்பின் தோன்றிய மகாவீரபுருஷர்என்று கொண்டாடப்பெற்ற பிரதமருக்குத் தற்போது வயசு 68. இன்று சர்வதேசஅரங்கில் இலங்கை ஓர்முக்கியஸ்தானம் வகிக்கிறதென்றால், அதற்குச் சுதந்திரஇலங்கையின் முதலாவது பிரதமராகும் பாக்கியம்பெற்ற சேனநாயக அவர்களின் அயராஉழைப்பும், இராஜ்ஜியத்திறமையுமே முக்கியகாரணம்என்க. மக்களின் மத்தியிலே மக்களுடன் சேர்ந்துவாழ்ந்து, அவர்களின் சுகதுக்கங்களில் சமபங்கெடுத்து, அவர்களின் உண்மைத்தேவைகளை அனுபவவாயிலாகச் சரிவரத்தெளிவாய் அறிந்துகொண்டு சட்டசபைப்பிரவேசஞ்செய்த முதலாவது சனப்பிரதிநிதி என்றபெருமையும் அவருக்கே உரியது. காடுகரம்பைகளை அழித்து நாடாக்கிக் கால்வாய்கள் குளங்களைத் திருத்திச் செல்வவளத்தை இனிதே பெருக்கி இந்நாட்டினை அதன்புராதன மகோன்னதநிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே அவரது நீண்டகாலவாழ்க்கைக் கனவாயிருந்தது. அவரால்செய்யப்பெற்று இப்போது எஞ்சியிருக்கும்குறையை நிறைவாக்கிவைக்கத் தமக்குப்பின் தமதுபுதல்வர் திரு. டட்லி சேனநாயகஅவர்களை அவர் இலங்கைக்கு அளித்துச்சென்றிருக்கிறார். போந்தகல்வியறிவுப் பொதியோடு சட்டசபைப் பிரவேசஞ் செய்யாதஅவர் இந்நாட்டின் அரசியற்சுதந்திரமே காணுதமகத்தான காரியங்களைச் சாதித்துவைத்த அதிசயமானது இலங்கைமக்களால் என்றுமே மறக்கற்பாலதன்று. "சனசமூகத்தில் இதற்குமுன்எவருமே சம்பாதித்திராத வகையில் சகலபிரசைகளினதும் ஏகோபித்தநம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றுக்கொண்ட ஒரேயொருவர் திரு. சேனநாயகஅவர்களே" என்று இந்நாட்டிற்கு அரசியற்திட்டம் வகுக்கவந்த சோல்பறிகம்மிஷன் அவரைப்பாராட்டியது.

பிரதமர் சேனநாயகஅவர்கள் 1884-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 20-ந் திகதி ஜனனமாயினர். பெருஞ்செல்வச்சீமானாய், தருமசீலராய், செல்வாக்குடையராய் விளங்கியிருந்த முதலியார் டொன் ஸ்பேற்றர் சேனநாயகஅவர்களே இவர் தந்தையார். இவர் கல்கிசையிலுள்ள சென். தோமஸ் கல்லூரியிற் கல்விபயின்று கிறிக்கெற்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆதியவற்றில் சிறந்துவிளங்கினர். கல்விகற்றுமுடிந்ததும் சேர்வேயர்பகுதியில் ஓர்லிகிதராக அமர்ந்து, பின்னர் அத்தகைய உத்தியோகம் தமதுபோக்குக்கு ஒத்துவராததுகண்டு அதிலிருந்துவிலகிக் கமத்தொழிலிற் பிரவேசித்தார். காடுகளை அழித்து றப்பர், தென்னைப் பயிர்கள்செய்து அதில் வெற்றியும் கண்டார். மதுவிலக்குப் பிரசாரத்தில் அவர் ஈடுபட்டதும் அக்காலத்தில்தான்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## சற்றேனும் வேறுபாடு இல்லை

—சிக்காகோ

"கம்யூனிஸ்த எதேச்சாதிகாரத்துக்கும், அடிமைத்தனத்துக்கும் துளி கூட வித்தியாசம்இல்லை. தனிமனிதனின் கண்ணியத்துக்கே உலைவைக்கும் கொடுங்கோலே கம்யூனிஸம். அடிமைத்தனம் நிலைநிற்கவில்லை. அந்தக்கதிதான் கம்யூனிஸ்த எதேச்சாதிகாரத்துக்கும் ஏற்படும். இறுதியில் அதுஅழிவுறும்" என ஜனாதிபதி ட்ரூமன் அவர்கள் இங்கு தேசீய (நீகிரோ) பத்திரிகைச்சங்கத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகின்றார். அமெரிக்காவில் இவ்வாரம் "நீகிரோ செய்திப்பத்திரிகை வாரம்" ஆகக் கொண்டாடப்படுவதுகுறித்த அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். நியூயோக் நகரிலே முதன்முதலாக வெளியான "சுதந்திர நாதம்" என்ற அமெரிக்கநீகிரோப் பத்திரிகை இவ்வருடத்தில் தனது 125-வது ஆண்டு நிறைவைக்கொண்டாடுவதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

## தடைகள் கடுமையானவையல்ல

—வாஷிங்ரன்

சோவியற்அரசு தனதுநாட்டிலுள்ள வெளிநாட்டவர்கள்மீது விதித்துள்ள பிரயாணத்தடைகளைக் காட்டிலும் கடுமைகுறைந்த தடைகளையே அமெரிக்காவிலுள்ள சோவியற்பிரசைகளது நடமாட்டத்தின்மீது அமெரிக்கஅரசாங்கம் விதித்திருக்கிறது. திங்களன்றுவெளியான அமெரிக்கஉத்தரவுப்பிரகாரம், அமெரிக்க ஐக்கியதேசத்தில் எந்தஇடத்துக்கு வேண்டுமானலும் சோவியற்பிரசைகள் செல்லமுடியும். நிபந்தனைஎன்னவென்றால், அப்படிப்போகவிரும்பும் இடத்தைப்பற்றி 48மணி நேரத்துக்குமுன்னதாகத் தகவல்கொடுக்க வேண்டும்என்கிற சம்பிரதாயம்மட்டுமேயாகும். அதுவும், தங்கள்உத்தியோகம் சம்பந்தப்பட்ட நகருக்கு 25மைல் தூரத்துக்குஅப்பால் செல்லவிரும்பும்போதுதான் இப்படித் தெரியப்படுத்துமாறு கோரப்படுகிறது. பிரித்தானி, பிரான்ஸ், இத்தாலி, ஒல்லாந்து, கனடாஆகியநாடுகளும் சோவியற்பிரசைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும்உத்தரவை ஏககாலத்தில்பிறப்பித்துள்ளன. 1941-ம்ஆண்டு முதல் சோவியற்அரசாங்கம் அனனிய நாட்டவர்கள்மீது நடமாட்டத்தடை விதிகளை விதித்திருக்கிறது. இப்போது 16 சோவியற்குடியரசுகளிலே பன்னிரண்டுக்குள் அன்னியர்கள் நுழையவேமுடியாது. அவைமுற்றுக அடைக்கப்பட்டுள்ளன. மற்றக்குடியரசுகளில் பிரவேசத்தடைக்கு இலக்கானஇடங்கள் ஏராளமாகஇருக்கின்றன. 33 பிரதான சோவியற்நகரங்களும் அன்னியர்கள் பிரவேசிக்கமுடியாதபடி பூட்டிவைக்கப்பட்டுள்ளன.

## வருகால உலகின்நம்பிக்கை

—கீ வெஸ்ற், புளோறிடா

கலம்பியாசர்வகலாசாலைப்பத்திரிகை எழுத்தறிஞர்கழக வைபவத்திலே இளம்பத்திரிகைஆசிரியர்கள் நிறைந்த கூட்டத்தில் பேசுங்கால், "வருங்கால உலகின்நம்பிக்கை வாலிபசந்ததியினரே" என்ற தமது திடநம்பிக்கையை ஜனாதிபதிட்றூமன் வெளியிட்டார். அமெரிக்காபோன்றமகத்தான குடியரசின் வருங்காலம் உங்களைப்போன்ற வாலிபர்களிடமே தங்கியிருக்கிறது. நாம்இப்போது சுதந்திரஉலகில் தற்காப்புப்பலத்தை வளர்த்துவருவதன் நோக்கம், சமாதானத்தைச் சிரஞ்சீவியாக்குவதேயாம். ஆக்கிரமிப்பு நோக்கம் நமக்கு அறவேகிடையாது. சோவியற்தலைவர்கள் ஆக்கிரமிப்பில் இறங்காவண்ணம் அதைரியப்படுத்துவதே நமது பாதுகாப்புவளர்ப்புத் திட்டத்தின்லட்சியமாகும். அமெரிக்காவுக்கு எதேச்சாதிகாரநோக்கு இல்லவேஇல்லை. அதற்கு மண்ணைசை இல்லை. பிறரின்சொத்து சுதந்திரத்தைப்பறிக்க நாம் திட்டம்போடவில்லை. அத்தகண்ணம்நமக்குஇல்லவேஇல்லை. வெளிஉலகத்திலிருந்து — நமதுசுதந்திர கூட்டாளிகளிடமிருந்து நாம்எவ்வளவோ தெரிந்துகொள்ள வேண்டியதுஉண்டு. நாம்எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். சரக்குகளைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். நட்பைப் பரஸ்பரம் வழங்கிக்கொள்ள வேண்டும்" என்றும் அவர்கூறலாயினர்.

## நோய்க்கிருமிக் குற்றச்சாட்டு

—முன்சான் (கோறியா)

கோறியாவில் "நோய்க்கிருமிபரப்பும்" போரைத்தொடுத்ததாக ஐ. நா. படைகள்மீது கம்யூனிஸ்தர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். "அறிந்த பொய்களே"க் கொண்டு வேண்டுமென்றே விஷமப்பிரசாரம்செய்யும் கம்யூனிஸ்தர்களின் தந்திரோபாயங்களுக்கு இது ஓர்உதாரணம்என்று ஐ. நா. சேனாதிபதி மத்யூ பி. ரிட்ஜ்வே வர்ணிக்கிறார். கம்யூனிஸ்தர்களின் குற்றச்சாட்டு "ஆதாரமற்றது, முழுப்பொய்," "அதிலே எள்ளளவு உண்மைகூடஇல்லை" என்கிறார் ரிட்ஜ்வே. கம்யூனிஸ்த படையணிகளில் தொற்றுநோய்கள் பரவியிருக்கக் கூடும்எனவும், அதை மூடிமறைக்கவே அவர்கள் இந்தப்பிரசார சூழ்ச்சியில் இறங்கியிருப்பதாகத் தம்முடையமனதில் தோன்றுகிறது எனவும் அவர் அபிப்பிராயப்படுகிறார். இதற்கிடையே, கம்யூனிஸ்தஆதிக்கத்திலுள்ள கோறியாவின் பகுதிகளில் கண்டுள்ள தொற்றுநோயின் உண்மைக்காரணத்தைக் குறித்தும், உள்ள நிலைபரத்தைக்குறித்தும் பரிசீலனை செய்யும்படி ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைக்கம்மிற்றி அக்கிராசனர் போல் ரூகர்அவர்களுக்கு அமெரிக்க வெளிநாட்டுமந்திரி டீன அச்சிஸன் யோசனை தெரிவித்துள்ளார்.

## சோவியற் "கழிப்புத்திட்டம்"

—பாரீஸ்

மஸ்கோவகுத்த வழியிலிருந்து ஒரு அணுவளவேனும் அந்தப்பக்கம், அல்லதுஇந்தப்பக்கம் பிறழ்ந்தவர்களுக்குச் சோவியற்கம்யூனிஸ்த அதிகாரபீடம் சற்றேனும் ஈவிரக்கம் காட்டுவதில்லை. ரூஷியாவிலும்சரி, அதன் சார்புநாடுகளிலும்சரி கம்யூனிஸ்தர்கள் அதிகாரத்திற்குவந்தபிறகுகட்சிஆட்களான எண்ணற்றவர்கள் தொலைத்து ஒழிக்கப்பட்டுள்ளார்கள். இதற்குக் "கழிப்புத்திட்டம்" என்று அங்கேபெயர். சமீபத்திலே இந்தத்திட்டத்திற்குப் பலியானவர்கள், இருபிரபல செக்நாட்டுத் தளபதிகள். இராணுவபிரதானிஜாரோஸ்லாவ் புறோசாஸ்கா, உதவித்தற்காப்புமந்திரி பொகுமல் லடோவிக்கா. இவர்கள்இருவரும் செக் கம்யூனிஸ்த கட்சியின் அதிருப்திக்கு ஆளாகியுள்ளனர். இதைத்தொடர்ந்ததான் தலைவர்கள் கைதுசெய்யப்படுவதும், "சதி" "கொள்கைப்புரட்டு" என்ற சோடினைக் குற்றச்சாட்டுகளின்மீது அவர்கள் தூக்கிலிடப்படுவதும். சென்றவருடம் இதே செக்நாட்டில், கட்சியின்காரியதரிசி ஸ்லான்ஸ்கியும், மாஜி வெளிநாட்டுமந்திரி கிளமெண்டிஸ்ஸும் கைதுசெய்யப்பட்டனர். பிறகு அவர்களைப் பற்றி ஒருதகவலையும்காணோம். கடந்த 30 ஆண்டுகளில் சோவியற்எதேச்சாதிகாரம் எண்ணற்றகட்சித்தலைவர்களைத் தீர்த்துக்கட்டியிருக்கிறது. 1937-இல் சுமார் 3,000கெம்படைஅதிகாரிகளும் போர்வீரர்களும்தூக்கிலிடப்பட்டனர். க.தி.

# சுதேச வர்த்தமானம்

## யாழ்ப்பாணைக் கும்பிறிங்கோடு

ஐந்தாவதாய், மல்லாகத்தைச் சேர்ந்த யோவான் ஆசீர்வாதம், தொம்மை யோவான் அல்லது யோண் எனுமிருவருஞ்சேர்ந்து சென்றவருடம் ஆவணிமாதம் 9-ந்திகதி ஓர்கொடுவாட்கத்திகொண்டு கணபதிசெல்லனை வெட்டிக் கொன்றார்களெனத் தொடரப்பட்டிருந்தவழக்கு விசாரணைக்குள்ளாய், ஈற்றில் முதலாம்எதிரி குற்றவாளியென்று ஒப்புக்கொண்டதின்பேரில் ஆறுவருடக் கடுமுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட, இரண்டாம்எதிரி சுத்தவாளியாகி விடுதலையடைந்தான்.

ஆறாவதாய், மண்ணைச்சேர்ந்த கற்கிடந்தகுளக் கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதிலே சூசை சந்தியாகு சாம்பாய்வ, அலெக்சான்டர் சாம்பாய்வ, சூசைப்பிள்ளை அருளானந்தம் எனும் மூவர் சேர்ந்து அவ்வூர் தொம்மை சூசைப்பிள்ளையைச் சென்றவருடம் ஆனி 28-ந்திகதியன்று கொலைசெய்தார்களென்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். விசாரணைமுடிவில் எதிரிகள் மூவரும் சுத்தவாளிகளாகி விடுதலையடைந்தார்கள்.

ஏழாவதாய், வடலியடைப்பைச் சேர்ந்த கதிரவேலு நாகலிங்கம், கதிரவேலு குணசிங்கம் எனும் சகோதரர்களிலே மூத்தியவர் சென்றவருடம் சித்திரைமாதம் 30-ந்திகதியன்றிரவு ஐயாத்துரை, கனகசிங்கம்எனும் இருவரையும் வடலியடைப்பிலே துப்பாக்கி கொண்டு சுட்டுக்கொலைசெய்ய எத்தனித்தனரென்றும், பிந்தியவர் அவருக்குத் துணைச்செய்தனரென்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். முடிவில் எதிரிகள்இருவரும் சுத்தவாளிகளாகி விடுதலையடைந்தார்கள்.

## மற்றோர் வயோதிகர்சாலை

இலங்கையில் ஏலவேதானே கத்தோலிக்கதிருச்சபையால் நடத்தப்பட்டுவரும வயோதிகர்சாலைகளுடன் தற்போது புதிதாகஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. நீர்கொழும்புப்பிரிவிலே இத்தகைய ஸ்தாபனம்ஒன்றின் அவசியத்தைக் கொழும்புஅதிமேற்றிராணியார் உணர்ந்திருந்தார். அப்பிரிவிலே அப்படியான ஓர் தருமசாலையைத் தாங்களும் காணவேண்டுமென ஆசித்திருந்த திரு. ஜே. எம். டிலி வேறு தம்பதிகளின் உதாரசிந்தையாலே அவர்கொண்டஆசை இப்போது பூர்த்தியடைந்திருக்கிறது. அவர்கள் இதற்கென்று ரம்மிற்று எனும் கிராமத்தில்இருந்துவந்த தங்கள்முன்னோரின் நிவாசத்தையும், அதனோடுசேர்ந்த நான்குஏக்கர்காணியையும் வழங்கியிருக்கிறார்கள். இதிலுள்ள பங்களா அங்குசேர்க்கப்படும் வயோதிகர்களைப்பராமரிக்கும் கன்னியாஸ்திரீமாரின்மடமாக உபயோகிக்கப்படும். 50 வயோதிகர்கள்தங்க வசதியளிக்கக்கூடிய வாட்டுகளும், ஓர் சின்னக்கோவிலும் அதிமேற்றிராணியாரின் உதவியோடு அந்தக்காணியிலே அமைக்கப்படும். இந்தக்கட்டடங்களுக்குச் சென்ற19-ந்திகதிகாலை 10-30மணிக்கு அதிமேற்றிராணியாண்டவரால் அஸ்திபாரக்கல் இடப்படலாயிற்று.

## அக்குறெசா இடைத்தேர்தல்

பாராளுமன்றத்திலே காலியாயிருக்கும் அக்குறெசாத்தொகுதி இடைத்தேர்தல் இன்றுகடைபெறவிருந்தது. ஆனால், பிரதமர்அவர்களின் அகாலமரணத்தையிட்டு இந்தஇடைத்தேர்தல் வருகிற சித்திரைமாதம் 24-ந்திகதிக்குப் பின்போடப்பட்டிருப்பதாகச்

---

அவர்களேவிசாரித்த நீதிபதிகளுக்கும் அதேகதி நேரிட்டது குறிப்பிடத்தக்கது.

சென்றசனிக்கிழமைஇரவு வெளியான கெசற்றிலே பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது.

## போஸ்ற்மாஸ்றர் ஜெனறல்

இலங்கைப் புதிய போஸ்ற்மாஸ்றர் ஜெனறலாகவும், தந்திப்போக்குவரத்துகளின் தலைவராகவும் திரு. வி. ஏ. நிக்கலஸ்அவர்கள் அரசாங்க உத்தியோக சேமவைக் கம்மிஷனாலே நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர்மூன்னே பிரித்தானிய தந்திசேவையின் லண்டன்காரியாலயத்தில் கடமைபார்த்தவர். இலங்கைத் தபாற்பகுதியில் இவர் 23 வருடம் சேவைசெய்தபின் 1938-ம் ஆண்டுமுதல் உத்தியோக உயர்ச்சிகள் பெற்றுவந்த 1949-ம் ஆண்டு ஓக்றிங்போஸ்ற்மாஸ்றர் ஜெனறலாகவும், தந்திப்போக்குவரத்துகளின் தலைவராகவும் நியமனஞ் செய்யப்பெற்றிருந்தார்.

## உள்நாட்டுவிமானப்பிரயாணம்

இலங்கை விமானக்கழகம் வருகிறவைகாசிமாதம் 1-ந்திகதி தொடக்கம் கிரமமான உள்நாட்டுவிமானப்போக்குவரத்தை ஆரம்பித்து நடத்தவிருக்கிறது. இதற்குக்காரணம், வாடகைவிமானப்பிரயாணங்களும், உல்லாசப்பிரயாணங்களும் அதிகரித்துவருவதேயாகும். அதனால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேலும் பல விமானநிலையங்கள் அமைக்கப்படும். இவற்றின்கட்டடவேலைகள் விரைவிலே தொடங்கும். கொக்கலை, திசமாறு, மட்டக்களப்பு, புத்தளம், அனுராசபுரம் ஆகியவிடங்களில் விமானங்கள் இறங்கிச்செல்லும். தகுதியும் அனுபவமும்வாய்ந்தவர்கள் இப்போக்குவரத்து விமானங்களைச் செலுத்துவார்கள். உள்நாட்டுப்போக்குவரத்து விமானங்கள்மூலம் தபால்கள், புதினப்பத்திரிகைகள் ஆகியவற்றையும், மற்றும் சாமான்களையும் நாட்டின்பல்வேறு பகுதிகளுக்கும் தினமும்அனுப்பிவைக்கவும் ஒழுங்குகள் செய்யப்படும்.

## வாக்காளர் தொகை

தற்போது கடைபெற்றுவருகின்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 1947-ம் ஆண்டு ஆவணி 25-ந்திகதி முதல் புரட்டாசி 20-ந்திகதிவரையில் கடைபெறலாயிற்று. அப்போது சமமதிச்சீட்டுக்கொடுக்கத் தகுதியுடைபோராய்இருந்த வாக்காளர்கள் 30,48,145 பேர். இவ்வருடம் நிகழவிருக்கும் பொதுத்தேர்தலுக்கு 1950-ம் ஆண்டின் வாக்காளர் பதிவுஇடாப்புப் பிரயோகிக்கப்படும். இந்த இடாப்பிலே அடங்கியுள்ளவாக்காளர் 31,36,666 பேர். இந்தியவாக்காளர்களில் ஏறக்குறைய நூற்றுக்குத் 90 விகிதமானோர் தட்டுப்பட்டபோதிலும் முன்னிலும் வாக்காளர்தொகை அதிகரித்தேயிருக்கிறது.

## பதில் சொல்வார்களா?

பாராளுமன்றத்திலே புத்தளப்பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. டபின்பு. லீயோ பெர்ணண்டோ அவர்கள் ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகரை ஆதரித்துப் பாணந்துறையில் நடைபெற்ற பட்டினசங்க இடைத்தேர்தல் கூட்டம்ஒன்றிற்குத் தலைமைவகித்துப் பேசியபோது: "சமசமாஜகட்சியைச்சேர்ந்த பாராளுமன்றஅங்கத்தவர்கள் இலங்கைமக்களுக்குப் பிரயோசனமான எத்தனைகாரியத்தையும் செய்கிறார்களென்றோ, அல்லது பொதுசனநலனுக்காகத் தங்கள்பணத்தில் ஏதாவது செலவிட்டிருக்கிறார்கள் என்றோ எவராவதுநிரூபித்தால் அரசாங்ககட்சியிலிருந்து விடைபெற்றுக்கொண்டுவிலகிச் சமசமாஜவாதிகள் சேர்ந்துள்ள கட்சியின்பக்கமாகப் போவதற்குத் தயாராயிருக்கிறேன்" என அறைகூவியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணுக்குண்டல்ல அன்பே!

"கம்யூனிஸத்தை எதிர்க்க வெறும்துப்பாக்கிகள் மட்டும் இருந்தால்போதாது. மக்களின் பசியைத் தீர்ப்பதன் மூலமே அதற்குப் பரிகாரம் காண முடியும். அமெரிக்காவிலே ஒரு காலத்தில் கம்யூனிஸ்தபயம் ஏற்பட்டிருந்தபோது அமெரிக்க பொதுமக்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்துப் பொருளாதார அமைப்பைச் சீர்படுத்தினர்கள். அதேநிலைமைதான் இப்பொழுது இந்தியாவில் ஏற்பட்டுள்ளது" என்று காலஞ் சென்ற அமெரிக்க ஜனதிபதியின் பாரியாரான ஸ்ரீமதி எலியனோர் றூஸ்வெல்ற் அவர்கள் டில்லியில் நிகழ்ந்த ஒருபெருங் கூட்டத்தில் கூறியிருக்கின்றார். ஆம், கம்யூனிஸத்தைப் பலாத்காரத்தால் அடக்கமுடியாது. பசியாறஉண்பதற்குப் போதிய உணவும், உடுக்க உடையும், குடியிருக்க வசதியுமுள்ள மக்களிடையே கம்யூனிஸம்பரவாது. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்திபண்ணமுடியாதநிலையிலுள்ளமக்களிடையே தான் கம்யூனிஸம் பரவுகிறது. எனவே, கம்யூனிஸம்பரவாமல் தடுப்பதற்குஅவசியமாயிருப்பது அன்பு. ஆயுதபலத்தால் கம்யூனிஸத்தைத் தற்காலிகமாக அழுத்திவைத்திருக்கலாமே அல்லாது கம்யூனிஸ்த மனப்பான்மையை மாற்றஇயலாது. தன்னை அழுத்தி வைத்திருக்கும் சக்தி குன்றுகிறவரையில் அது காத்திருந்து, அந்தச்சக்தி குன்றினவுடன் திரும்பவும் தலையெடுக்கும்.

பாப்புமார் இந்தஉண்மையை எப்பொழுதும் தெளிவாக எடுத்தோதி வந்துள்ளார்கள். மக்களும், அரசாங்கங்களும், சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமாகத் திருச்சபை கடைப்பிடித்துவரும் கொள்கைகளை நடைமுறைகளுக் கொண்டுவரமுயற்சியெடுத்திருந்தால் கம்யூனிஸம் தலையெடுத்திருக்காது. ஒருசிலரின் சுயநலப் பற்றும், சகோதரஉணர்ச்சியில்லாத்தன்மையும் கம்யூனிஸம் பரவுவதற்குக் காரணமாயிருந்தன. 'எல்லாவற்றையும்விடத் தேவன்மீது அன்புசெலுத்து. இரண்டாவது, உன்னை நேசிப்பதுபோல அயலானையும்நேசி' என்று கிறீஸ்துவம் போதிக்கிறது. மனிதர்கள்அனைவருக்கும் தந்தையாயிருப்பவர் கடவுள். எனவே, மனிதர்களெல்லோரும் சகோதரர்களேயாவர். இந்தச் சகோதரவுணர்ச்சி இருந்தால் ஒருமனிதன் பட்டினியும்பசியுமாய் வாடுகையில், இன்னொருவன்—தனது தேவைக்குமேல் பத்துமடங்கு நூறுமடங்கு ஆயிரமடங்கு வைத்திருப்பவன்—அந்தமனிதன் பட்டினியும்பசியுமாயிருப்பதை அறிந்தும் அவனுக்கு உதவிசெய்யாமல் கண்டபடி காசைவாரியிறைத்து உல்லாசவாழ்க்கை நடத்திவந்தானால் கம்யூனிஸம் பரவுவதற்குச் சொல்லவா வேண்டும்?

உலகில் கம்யூனிஸம்தோன்றியிருப்பது மட்டுமல்ல, பலநாடுகளை விழுங்கியும்விட்டது. இன்னும்சிலர் சுயநலப்பற்று உடையவர்களாயும், சகோதரஉணர்ச்சி அற்றவர்களாயும் அர்த்தமற்ற மூடக்கொள்கைகளால் மனிதர்களிலேயே உயர்வுதாழ்வுகற்பித்தும், நாட்டைக் குழப்புகின்றனர். இத்தகையோர் தங்கள் கண்களைத்திறந்து உலகத்தின் இன்றையநிலையைப் பார்த்து, வெள்ளம்வருமுன் அணைகோலுவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசரின் ஜனனவிழா

நிகழும்பங்குனிமாதம் 2-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தபிதாவின் 76-வது வருட ஜனனதினமும், அவர் பாப்பரசராகத் தெரியப்பெற்ற 13-வதுவருட நிறைவுதினமுமாகும். அவ்வார இறுதிமுழுவதும் வத்திக்கான்நகரின் சிறியதபாற்கந்தோர் ஏறக்குறைய உலகின் ஒவ்வோர்பகுதியிலுமிருந்தே கிடைத்தஆயிரக்கணக்கான சோபனவாழ்த்துக் கடிதங்கள், தந்திச்செய்திகளைப் பெற்று அனுப்புவதிலே இரவுபகலாக வேலைசெய்துவரலாயிற்று. வத்திக்கான்கட்டடங்களில் பாப்பரசரின்கொடிகள் ஏற்றிப் பறக்கவிடப்பட்டிருந்தன. அன்றுதினமும் எந்தவிதமாற்றமுமின்றியே பாப்பரசர் தமதுகடமைகளைப் பார்த்தார். அன்றுஆயிரம்பேருக்குமேல் அளித்த பேட்டிகளில தாம்நன்றாகப்பேசவறிந்த ஏழுபாஷைகளில் அவர்பேசலாயினர். புதன்கிழமையன்று அவர் தமதுமகுடதாரண ஞாபகதினத்தைப் பயபக்தியாகக் கொண்டாடினர்.

### செபமாலைச்சீவியம்

நிகழும்நூற்றாண்டின் ஆரம்பத்திலே மத்தியபசிபிக் சமுத்திரத்திலுள்ள மாஷல்தீவுகளில் இருந்துவந்த ஜேர்மன் கத்தோலிக்க மிஷனரிமார் அங்கிருந்தும்பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். இது நிகழ்ந்து நாற்பதுவருடங்களின்பின் அமெரிக்க யேசுசபைக் குருமார் அத்தீவுகளுக்குச் சென்றபோது, அத்தீவுகளில் சஞ்சரிக்கிறவர்கள் இன்னமே ஒன்றுகூடிச் செபமாலைசெபித்துவரக் கண்டார்கள். சிலவிடங்களிலே அவர்கள் செபமாலைமணிகள் இல்லாமையால் அவற்றிற்குப்பதில் கூழாங்கற்களை உபயோகித்துவரக் காணப்பட்டார்கள். பாவத்தைப்பற்றிய மனச்சாட்சிக்கண்டனமுடையவர்களாயிருந்து பாவசங்கீர்த்தனஞ்செய்ய ஆவலுடையோராய் இருந்தார்கள். கரோலின், மாஷல்தீவுகளின் விக்கார்அப்போஸ்தலிக்குவான பீனிஆண்டவர் அமெரிக்க ஐக்கியதேச வூட்ஸ் ரொக்குரூ மடத்து யேசுசபைமாணவர்களுக்கு அத்தீவுமக்களின் குன்றாத வேதவிசுவாசத்தை ஓர் எடுத்துக்காட்டாக எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

### ஸ்பெயினும் சமயசுதந்திரமும்

ஜனதிபதி ட்றூமன் அவர்கள் ஸ்பெயினிலே ஜெனறல்பிரங்கோவின் ஆட்சிபற்றிச் சிலகாலத்திற்குமுன் துவேஷம்தெரிவித்திருந்தார். அதற்கு அவர் கொடுத்த விளக்கம்யாதெனில், சமயசுதந்திரம் அளிப்பதாக அதுகொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதே. அவரின்விளக்கத்துக்கு ஸ்பானிய வெளிநாட்டு மந்திரிகாரியாலயம் அளித்திருக்கும் பதிலிலே, அந்நாட்டிலுள்ள 20,000 புரொட்டஸ்தாந்தர்களும் 200 சிற்றாலயங்களைக் கொண்டிருப்பதாகவும், ஸ்பானியகத்தோலிக்கருடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்துக் கத்தோலிக்கருக்குள்ள குருமாரைக் காட்டிலும் அவர்கள் அதிகமான பாதிரிமாரைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது. ஸ்பானிய அரசியல் அமைப்பிலே விதிக்கப்பட்டுள்ள அரசாங்கசமயம் கத்தோலிக்கசமயமாக இருந்தபோதிலும் அந்நாட்டிலுள்ள பிறசமயத்தவர்கள்மட்டிலே எத்தனையோ ஆண்டுகளாகச் சகிப்புத்தன்மையே இருந்துவருவதாக அப்பதில் மேலும் அறிவிக்கின்றது. சமயசுதந்திரம்அளிப்பதாகக் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையெனில், அத்தகையவாக்குறுதிகளைப்பற்றி வாஷிங்ரனிலுள்ள அரசாங்ககந்தோர்ப் பகுதியிலோ, அன்றேல் மதிரித்நகரிலுள்ள வெளிநாட்டுக் காரியாலயத்திலோ எவருமே எதுவும் அறியமாட்டார்கள் என்றும், ஸ்பெயினில் சமயசுதந்திரம் ஏலவேதொட்டுத்தானே இருந்துவருகிறதுஎன்றும் அப்பதில் மீண்டும் அறிவித்துள்ளது.

### அமெரிக்க ஐந்தாவதுயாத்திரை

பாத்திமாதிருப்பதிக்கு அமெரிக்ககத்தோலிக்கரின் ஐந்தாவது தேசீயயாத்திரை வருகிறஐப்பசிமாதத்திலே நடந்தேறவிருக்கிறது. இந்தப்பெரும் யாத்திரைக்கோஷ்டி நியூயோக்நகரிலிருந்து வைகாசிமாதம் 2-ந்திகதி கப்பலிலேபுறப்பட்டு அம்மாதம்10-ந்திகதி லிஸ்பன்நகர் போய்ச்சேர்ந்து, அங்கே அர்ச். அந்தோனியார் பிறந்தஇடத்தைத் தரிசித்துக்கொண்டு 13-ந்திகதியன்று—அதாவதுமூன்று இடைப்பிள்ளைகளுக்கும் தேவதாயார் முதற்காட்சியளித்த 35-வதுவருட நிறைவுஞாபகதினமன்று பாத்திமாபதியில் நடந்தேறும் கொண்டாட்டங்களுக்குச் சமுகமளிக்கும். இந்தயாத்திரிகர்கள் அத்திருப்பதியில் மூன்றுதினங்கள் தங்கியிருந்தபின்லூர்துபதியையும், அர்ச். பெர்னதெத்அம்மாளது வாழ்க்கையுடன்சம்பந்தப்பட்ட இடங்களையும், அதன்மேல் லிசியேபதி சென்று அங்கே அர்ச். சின்னத்தெரேசம்மாளுக்குத் தோத்திரமாகக் கட்டியெழுப்பப்பெற்றிருக்கும் பசிலிக்காஎனப்படும் மகாதேவாலயத்தையும் தரிசித்தபின் பார்சலோனைநகர்சென்று அங்கே நடந்தேறவிருக்கும் சர்வதேச சற்பிரசாதமகாநாட்டிற் கலந்துகொள்வார்கள்.

## பாதிரியார் யாது கூறுகின்றார்?

அமெரிக்க ஐக்கியதேச மேரிலாந்திலே செவிசேஸ்நகரிலுள்ள எபிஸ்கோபல் புரொட்டஸ்தாந்த சபையைச்சேர்ந்த சகலஅர்ச்சியசிஷ்டவர்களின் கோவில் பாதிரியாரான கனம். சார்ல்ஸ் டபிள்யு. லோறி, பிஎச். டி. அவர்கள் சமீபத்திற்செய்த பிரசங்கம்ஒன்றிலே பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

"வடக்கு யூறேசியாவிலே தலையெடுத்திருக்கும் நவீனகம்யூனிஸ்த அரக்கனுடன் பொருளாதார விஷயமாகவோ, அன்றேல் இராணுவவிஷயமாகவோ எதிர்மூட்டாக எதிர்த்துநின்று போராடக்கூடியஒரேயொரு வல்லரசுஅமெரிக்காஒன்றேயாகும். ஆயினும், இப்போராட்டத்தில் ஒரு நேசஅரசை—யோக்கியதாம்சமற்ற எதேச்சாதிகார கொடுங்கோன்மைக்கு விட்டுக்கொடுப்பதில்லையென்றும், அதனுடன் சமாதானம்செய்துகொள்வதில்லையென்றும் தான்கொண்டுள்ள கிர்ணயத்தில் பலமாகவுன்றியுள்ள ஓர்சகாயஅரசை—நாம் கொண்டிருக்கின்றோம். அந்தநேசஅரசு ரோமாபுரித் திருச்சபையேயாகும். சமயத்தினுடையவும், மனிதனுடையவும் பரமசத்துருவுடன் அநேகநாடுகளிலே அது மிகமும்முரமாக ஞானப்போர் நடத்திவருகின்றது. அதன்மக்கள் திருச்சபைச்சரித்திரம் முழுவதிலுமே வேதசாட்சியத்துவத்தின் மகாப்பெருமைவாய்ந்த அத்தியாயங்களிலேசிலவற்றினை இந்தவேளை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். மற்றும்அநேக பிரமாணிக்கமுள்ளகுருமாரும், சாதாரணகத்தோலிக்கரும் சீவந்தரானவேதசாட்சிகளாய் இருக்கின்றார்கள். அதாவது சாகாதிருக்கவும், ஆனால், இக்காலத்தின் அந்தகாரத்திலே கிறீஸ்துநாதரினதும், நம்பிக்கையினதும் தீபம் அணைந்துபோகாமல் சீவித்திருந்து காத்துவைப்பதற்குமாக நாளுக்குநாள் இயன்றவரையிலே சாவதானமாகவும், விவேகமாகவும் அவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள்.

"மனிதனுக்காக நாம் நடத்தவேண்டியிருக்கும் கொடியயுத்தத்திலே அத்துணைபெரும் ஊக்கமும், அத்துணை அஞ்சாதவீரத்துவமும் கொண்டுள்ள ஓர்நேசஅரசை நிராகரித்துத்தள்ளிவிடவோ, அன்றேல் அவமதித்து அலட்சியம்பண்ணிவிடவோ நாம் மனங்கொள்ளலாகுமா? இந்தப்பெரிய சர்வதேசதிருச்சபையானதுகம்யூனிஸத்துடன் நடத்திவரும் தனது சீவிய—மரணப் பெரும்போராட்டத்திலே அது எப்படிப்போனாலும் நமக்கென்னவென்று உணர்ச்சியற்றிருக்க வேண்டுமா? இவைகளையெல்லாம் சிந்தித்தே ஜனதிபதி ட்றூமன் அவர்கள் வத்திக்கானுக்கு அமெரிக்கஸ்தானிகர் ஒருவரை நியமனஞ்செய்யத் தீர்மானித்தாரென நான் சந்தேகமின்றி நம்புகின்றேன்."

### திருநாள் அட்டவணை

**பங்குனிமாதம் 1952**

| | | | |
|---|---|---|---|
| வெ | 28 | அ. யோண் கப்பிரிஸ்ரன் | (வெ) |
| சனி | 29 | அ. எயுஸ்தாசியார் | (ஊ) |
| ஞா | 30 | திருப்பாடுகளின் ஞாயிறு | — |
| திங் | 31 | அ. பல்பினம்மாள் | (ஊ) |

**சித்திரைமாதம் 1952**

| | | | |
|---|---|---|---|
| செ | 1 | அ. ஊகோனப்பர் | (ஊ) |
| பு | 2 | அ. பிராஞ்சீஸ்கு பவுல் | (வெ) |
| வி | 3 | அ. அகப்பம்மாள் | (ஊ) |

சத்தியவேத
# பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
பங்குனிமாதம் 27-ந் திகதி

## பிரதமரின் மறைவு

இலங்கைமாதா ஈன்ற அருந்தவப் புதல்வரில் ஒருவராய், அரும்பெரும் தேசியத்தலைவராய், நாட்டின் சுதந்திரத்தையும், சுபீட்சத்தையும் உருவாக்கிய பெருந்தகைவாய்ந்த பெருமகனுய், தமது உடல் பொருள் ஆவி மூன்றினையும் நாட்டுமக்களின் நல்வாழ்விற்காக அர்ப்பணஞ்செய்த அருந்தியாகியாய், எல்லோரதும் அன்பையும், மரியாதையையும் எங்கெங்குமே பெற்றவராய் விளங்கியிருந்த பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் சென்ற 22-ந்திகதி சனிவாரம் 3-30 மணியளவில் மரணமானரென வானலை மூலம்பரந்தசெய்தியானதுபழுக்கக்காய்ச்சிய இருப்புக்கோலை இருகன்னதுவாரங்களிலும் செலுத்தியவாறாய் மிக்கவேதனையைத்தந்து எவ்வெவரையுமே துக்கசாகரத்தில் அமிழ்ந்தச் செய்வதாயிற்று. அவர் மரணமானதை அறியவந்ததும் இலங்கையிலுவதுமே கவலைக்குறிகள் காணப்பட்டன. தேசியகொடிகள் தாழஇறக்கப்பட்டுக் கறுப்புக்கொடிகளும், வெள்ளைக்கொடிகளும் உயரப்பறக்க விடப்பட்டன. இதற்குமுன் இலங்கையிலே எந்த ஒருசனத்தலைவரது மரணத்தின்போதும் இல்லாத வகையிலே மக்கள் துக்கங் கொண்டாடினர்கள். எமதுநாடு சிறியதொன்றாய் இருந்தபோதிலும் எமதுபிரதமர் இதற்கு வெளியிலும் எத்தனை பேரும், பெருமதிப்பும் பெற்றிருந்தார் என்பதற்குப் பிரலாபந்தெரிவித்துப் பலநாடுகளிலுமிருந்து பிரபலஸ்தர்கள்பலரும் அனுப்பியிருந்த தொகையான அனுதாபச்செய்திகளே போந்தசான்றாகும்.

எமதுநாட்டின் சரித்திரத்திலே மிகநெருக்கடியான ஓர்சந்தர்ப்பத்தில் பிரதமர்காலஞ்சென்றமையாலே ஈடுசெய்யமுடியாத ஓர்பெருநஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், அவர் நாட்டிலுள்ள பல்வேறு சமூகத்தினரையும், பிரிவினரையும்ஒருங்குசேர்த்து ஓர்ஐக்கியசமுதாயத்தை அமைத்திருந்தார். அவருடையபெருந்தன்மையும், சகிப்புத்தன்மையும், சமாதானவாஞ்சையும் எதிர்கால அரசியற்தலைவர்களுக்கு ஓர்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவரின் மரணத்தையிட்டுத் தமதுபேராலும், இலங்கைக்கத் தோலிக்கசமூகத்தின்பேராலும் கொழும்பு அதிமேற்றிராணியார் அனுப்பிவைத்த அனுதாபசெய்தியிலே, "இலங்கைப்பிரதமர் காலமானசெய்தியை அறிந்து மிகுந்தயரமடைந்தோம். ஸ்ரீலங்காவை ஒற்றுமையும், சுபீட்சமும்நிலவும ஓர்நாடாகப் புனருத்தாரணம் செய்யத்தொடங்கிய ஒருவரின்பெருமையைச் சரித்திரம் வெளியிடுமென்பதுதிண்ணம். இலங்கையிலுள்ள பிரசைகள்ஒவ்வொருவரும் அவர்மரணத்தைத் தங்கள் சொந்தநண்பர் ஒருவர் மரணமடைந்ததாகவே கருதுவார்களென்பதில் சந்தேகமில்லை. அவரது விவேகம்பொருந்திய இராசதந்திரத்திலும், அவரதுஎல்லையற்ற அன்பிலும் பயனடைந்தோர் எண்ணிலடங்கார்" எனத்தெரிவித்திருந்தார். இந்தவேளை எமது அரும்பெருந்தலைவரின் ஞாபகார்த்தமாகவும், அவருக்கு ஓர் நன்றியாகவும் நாம் செய்யத்தக்கது ஒன்றுண்டு. அதாவது, அவர் எந்தலட்சியங்களுக்காகப் பாடுபட்டுழைத்தாரோ அந்தலட்சியங்களுக்காக வாழநாம் முயலுவதேஎன்க.

பிரதமரின் எதிர்பாராத மரணத்தாலே கவலையிலாழ்ந்த இலங்கைமக்களுக்கெல்லாம் அத்தாலே இன்னுமோர் பெருங்கவலை எழலாயிற்று. பெரிதும் உத்தரவாதம்பொருந்திய அவருடையஸ்தானத்தை அவரைப்போன்று இனியார் வகிக்கப்போகின்றார்என்பதே இப்பெருங்கவலைக்குக் காரணமாகும். புதியபிரதமரை நியமிப்பதுகவர்னர்-ஜெனறல்சோல்பரிபிரபுவின் கடமையாகும். அதனால் ஓய்வுவிலேசென்றிருந்த அவர் பிரதமரின் மரணத்தைப்பற்றி அறியவந்ததும் ஆகாயவிமானமார்க்கமாய் நேற்றுப்பிற்பகல் 2 மணியளவில் கொழும்புவந்து சேர்ந்தார். மந்திரிமார் சகலருடனும் கலந்து ஆலோசித்தார். அவர் புதியபிரதமராக எவரை நியமனஞ்செய்கிறாரோ என்று அகிலஇலங்கையுமே மிகுந்தஅங்கலாய்ப்புடன் வானலைச்செய்தியை எதிர்பார்த்தவண்ணமிருந்தது. கடைசியாகப் பிற்பகல் 3-30 மணியளவில் எதிர்பார்த்திருந்தசெய்தி கிடைத்து—அதாவது பிரதமரின் புதல்வரும், கமத்தொழில் மந்திரியாருமான திரு. டட்லி சேனநாயக அவர்களே தமது அருமைத்தந்தையாரிடமாகப் புதியபிரதமராக நியமனஞ் செய்யப்பெற்றாரென்னும் சுபசெய்திகிடைத்து இருவில் ஒளிபோன்று கவலையின் மத்தியில் அனைவரையும் களிப்புறச் செய்யலாயிற்று. இந்தவேளை நாமும் புதியபிரதமருக்குச் சோபனங்கூறுகின்றோம். அவர் தமது அருமைத்தந்தையாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சகலரும்மதிக்க நல்லரசு நடத்திவரத் தயைபாலிக்குமாறு திருவருளை இரந்துகொள்ளுகின்றோம்.

### தபசுகாலத்தின்
## 5-ம் ஞாயிறு
(திருப்பாடுகளின் ஞாயிறு)

**சுவிசேஷ வாசிப்பு**
(அரு. 8: 46—59)

அக்காலத்தில் யேசுநாதர் யூதர்கள் கூட்டத்தை நோக்கித் திருவுளம்பற்றினதாவது: உங்களில் எவன் என்னிடத்தில் பாவமுண்டென்று காட்டக்கூடும்? உங்களுக்கு நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னை விசுவசிக்கிறதில்லை? சர்வேசுரனால் உண்டானவன் சர்வேசுரனுடைய வாக்கியங்களைக் கேட்கிறான், நீங்களோ கேட்கிறதில்லை. ஏனென்றால், நீங்கள் சருவேசுரனால் உண்டானவர்கள் அல்லாதவர்கள் என்றார். ஆதலால், யூதர்கள் மறுமொழியாக: நீ சமாரியனென்றும், பேய்பிடித்தவனென்றும் நாங்கள்சொல்லுகிறது சரியல்லவோ? என்றார்கள். அதற்கு யேசுநாதர் மறுவுத்தாரமாகத் திருவுளம்பற்றினதாவது: நான் பேய்பிடித்தவனல்லன்; ஆனால், நான் என் பிதாவைச் சங்கிக்கிறேன். நீங்களோ என்னைச் சங்கையீனப்படுத்தினீர்கள். ஆனால் நான் என் மகிமையைத் தேடுகிறதேயில்லை. அதைத் தேடுபவரும் எனக்கு நியாயந்தீர்ப்பவருமாகிய ஒருவரிருக்கிறார். யாராயினுமொருவன் என் வார்த்தையை அநுசரிப்பானேயாகில், என்றென்றைக்கும் அவன் மரணத்தைப் பாரான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அதைப்பற்றி யூதர் சொன்னதாவது: நீ பேய்பிடித்தவனென்று இப்போது அறிந்துகொண்டோம். அபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். ஆயினும் நீயோ: யாராயினும் என் வார்த்தையை அனுசரிப்பானேயாகில் என்றென்றைக்கும் மரணத்தைச்சுவைபாரான் என்கிறாய். எங்கள்பிதாவாகிய அபிரகாமைவிட நீ அதிகம் பெரியவனோ? அவர்மரித்தாரே; தீர்க்கதரிசிகளும் மரித்தார்களே; உன்னை யார் என்று மதித்துக்கொள்ளுகிறாய்? என்றார்கள். யேசுநாதர் மறுமொழியாகத் திருவுளம்பற்றினதாவது: என்னை நானே மகிமைப்படுத்திக்கொண்டால், என் மகிமை ஒன்றுமில்லை. என்னை மகிமைப்படுத்துகிறவர் என் பிதாவானவர்தான். அவரைத்தான் உங்கள் சர்வேசுரன் என்கிறீர்களே. ஆயினும், நீங்கள் அவரை அறியவில்லை. நானோ அவரை அறிந்திருக்கிறேன். நான் அவரை அறியேனென்று சொல்லுவேனாகில், உங்களைப் போல நானும் பொய்யனாயிருப்பேன். ஆனால், நான் அவரை அறிந்திருக்கிறதுமன்றி அவருடையவாக்கியத்தையும் அநுசரிக்கிறேன். உங்கள் பிதாவாகிய அபிரகாம் என் நாளைக் காணவேண்டுமென்று ஆசித்தார்; அதைக் கண்டு களிகூர்ந்தார் என்றார். ஆகையால் யூதர்கள் உனக்கு இன்னும் ஐம்பது வயதில்லையே, அபிரகாமைக் கண்டாயோ? என்று சொன்னார்கள். யேசுநாதர் அவர்களை நோக்கி: அபிரகாம் உண்டாவதற்குமுன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இதினிமித்தம் அவர்கள் அவர்பேரில் எறியும்படி கல்லுகளை எடுத்தார்கள். யேசுநாதரோ மறைந்து, தேவாலயத்திலிருந்து வெளியேபோனார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## NOTICE

The General Meeting of the Jaffna Catholic Union will take place at the Catholic Club, Main Street, Jaffna, on Sunday 6th of April at 10 a. m.

Since the election of the Committee is a very important item of the agenda, the Parish delegates are earnestly invited to attend that meeting.

**Henry Le Coutour, O.M.I.,**
*V. G.*
*Spiritual Director.*

Bishop's House,
Jaffna,
26-3-1952.

### யாழ்ப்பாணக் கத்தோலிக்க
## ஐக்கியசங்கம்

யாழ்ப்பாணக் கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணப் பெருந்தெருவிலுள்ள கத்தோலிக்க கிளப்பிலே அடுத்துவருகிழமை சித்திரைமாதம் 6-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடக்கத்தேறும்.

நிகழ்ச்சிநிரலிலே அதிகம் விசேஷப்பட்டகருமம், நிர்வாகசபையைத் தெரிவுசெய்வதாகும். அதனால, விசாரணைப்பங்குகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு ஆர்வத்துடன் அழைக்கப்படுகின்றார்கள்.

ஹென்றி லெக்குத்தூர்,
ஓ. எம். ஐ.
விக்கார் ஜெனறல்

மேற்றிராசனமாளிகை,
யாழ்ப்பாணம்.
26-3-52

### பிரதமரின் பூதவுடல் தகனம்

காலஞ்சென்ற பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களின் பிரேதம் நாளை நின்றுவரும் 29-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் கொழும்பிலே சுதந்திரசதுக்கத்தில் தகனஞ்செய்யப்படும். அங்குதானே ஈமக்கிரியைகளும் நடந்தேறும். அன்றுபிற்பகல் 3 மணிக்குப் பிரேதமானது பாராளுமன்றக் கட்டடத்திலிருந்து ஓர் பல்லக்கிலே ஊர்வலமாகச் சுதந்திரசதுக்கத்துக்குக் கொண்டுபோகப்படும். இலங்கையின் இராணுவப்படைவீரர்கள் பல்லக்கை இழுத்துச்செல்வார்கள். மூன்றுங்காய பிரிவுகளையுஞ்சேர்ந்த 600 புத்தபிக்குகள் இறுதிச்சடங்குகளை நிறைவேற்றுவார்கள். அவ்வேளை சமுகங்கொடுக்க நாட்டின்சகலபகுதிகளிலுமிருந்து பெருந்தொகையான மக்கள் வருவார்களென்ற எண்ணத்தின்பேரிலே சுதந்திரசதுக்கம் அதற்கென தெரிவுசெய்யப்படலாயிற்று. இந்தச் சதுக்கம் சுமார்மூன்றுலட்சம்மக்கள் கூடிநிற்கப்போதிய இடவசதியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமைப் பிரதமர் அந்தோ! மறைந்தனர்!!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கமமுயற்சியில் சிறந்தஅனுபவத்தைப் பெற்றுக்கொண்டபின் 1922-ம்ஆண்டிலே அரசியலிற்பிரவேசித்து அப்போதிருந்த சட்டசபையில் ஒரு அங்கத்தவராகத் தெரியப்பெற்றார். அவர் கேம்பிறிட்ஜ் முதலாம் சர்வகலாசாலையில் பயின்றவரு மல்ல; ஆங்கில இலக்கியங்களைப் படித்துப் புரட்டியவருமல்ல; ஆனல், இலங்கைமக்களையும், அவர்களின் தேவைகளையும் அவர் நன்கறிந்திருந்தார். நிர்வாகஆற்றலும் பொதுஅறிவும் நிரம்பப் பெற்றிருந்தார். இப்போதுபோல ஓர் சிறந்த பேச்சாளராகவும், எதிர்க்கட்சிகளின் விவாதங்களுக்குச் சுடச்சுடச் சூட்சமாகப் பதிலளிக்கும் திறமைசாலியாகவும் அப்போது அவர் இருக்கவில்லை. முற்காலத்துச் சிங்களமன்னர்கள்கட்டிய நீர்ப்பாசன வாவிகள், குளங்கள், வெட்டுவாய்க்கால்களைப் புதுப்பித்து, பாழடைந்திருக்கும் ஏராளமான தேசப்பரப்பைத் திரும்பவும் பயிர்ச்செய்கைக்குள்ளாக்குவதே அவரதுநெடுங்கால அவாவாயிருந்தது. அதனல் 1931-ம்ஆண்டு அவர் கமத்தொழில்மந்திரியாராகவந்ததும் இலங்கையிலே கமத்தொழில் அபிவிர்த்திசம்பந்தமாய் புரட்சிகரமான ஓர் மாறுதலை உண்டுபண்ணினர். மகாசேன, மகாபராக்கிரமவாகு ஆதியமன்னர்களது காலத்திற்குப்பின் எவருமே எத்தனித்திராதநீர்ப்பாசனவிருத்தி — குடியேற்றவிருத்தித் திட்டங்கள் பலவற்றைத் தீவிர நம்பிக்கையுடன் முதன்முறையாக மேற்கொண்டு ஊக்கமாகப் பணியாற்றிவந்தார்.

டொனமூர் அரசியற்திட்டம் இங்குநடைமுறையில் இருந்தகாலத்திலே இந்நாட்டின் ஆட்சித்துறையில் அவர் சிறப்பாகப் பங்குபற்றினர். அதேசமையத்திற்றேன பூரணசுயாட்சி இயக்கத்தையும் தலைமைவகித்துநடத்தினர். யுத்தகாலத்திலே எமதுநாட்டுக்கு உணவுப்பொருட்கள் அனுப்பிவைக்கும் வெளிநாடுகளின்தொடர்புகள் துண்டிக்கப்பட்டு, இலங்கைமக்கள் உணவுக்குத் திண்டாடிக் கொண்டிருந்தகாலத்திலே உணவுதேடிக் கொடுத்து, இலங்கைமக்கள் சுயாட்சிக்குத் தகுதியுடையவர்கள் என்பதையும் வெளிஉலகம் நன்குஉணரும்படி செய்துவைத்தார். 1944-ம் ஆண்டு இலங்கை அரசியற்திருத்தத திட்டம் ஒன்றை வகுத்தமைக்கச் சோல்பறிக்கம்மிஷன் வந்தபோது அவரின்சாட்சியத்திலே அது பெரிதும் திருப்தியடைந்தது. இலங்கை சுயாட்சியை நோக்கி எவ்வளவோதூரம் முன்னேறியிருக்கிறது என்பதையும் அவ்வேஜை நடத்திய விசாரணையிலிருந்து அதுதெளிந்துகொண்டது. "அவர் ஓர் சிங்களராய் இருந்தபோதிலும அரசாங்கசபைமுதல்வர் என்றமுறையிலே அவர் தம்மை ஒருபோதும் ஓர் சிங்களராக எண்ணிக்கொண்டதில்லை. எல்லாவகுப்பினரும் அவர்பால் நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருந்தனர். நாட்டினை நல்வழியில் நடத்திச் செல்வதிலே அவரைப்போல் வேறுஎவருமேஇதுவரைமுயற்சி எடுக்கவில்லை" எனச் சோல்பறி பிரபு அப்போது பாராட்டியிருந்தார்.

பின்னர் சோல்பறிக்கம்மிஷனின் சிபாரிசுகளை மேற்கொண்ட அரசியற்திட்டத்தை அங்கீகரிக்கவேண்டுமென்று அரசாங்கசபையில் வாக்கலங்காரமாக அவர் நிகழ்த்திய சொற்பொழிவானது இலங்கையின் அரசியற்சரித்திரத்திலே மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அதன்மேல் 1942-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலைத் தொடர்ந்து அவர் இலங்கையின் பிரதமராயினர். அவரது சேவைகளைப் பாராட்டுமுகமாக 1950-ம் ஆண்டு அவர் ஓர்பிறிவிகவுண்சிலராக அரசபெருமாலை நியமனஞ்செயயப்பெற்றார். இலங்கையின் சுதந்திரபிதாவாக மதிக்கப்படுகின்றதிரு. சேனநாயக அவர்களின் எளியவாழ்க்கைப்பற்றும், உயரியநியாகமும், அஞ்சாத்துணிகரமும், அரசியல்மதியூகமும் ஆதியனவெல்லாம் இலங்கை மக்களின் இதயங்களிலே என்றைக்கும்பதிந்திருக்குமென்றும், அவர் இலங்கைக்கு ஆற்றியுள்ள தன்னலமற்ற மகத்தான எண்ணற்றசேவைகள் காரணமாக அவர்நாமம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுமென்றும் பூரணமாக நம்பியிருக்கலாம்.

## பொருட்காட்சி நிறுத்தப்பட்டது

பிரதமரின் எதிர்பாராத மரணத்தாலே அவரைக் கௌரவிக்குமுகமாகச் சென்ற 23-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 12 மணிக்கு முடியவிருந்த கொழும்புப்பொருட்காட்சி முதனாள் சனிக்கிழமை இரவு 10 மணியுடன் முடித்துவிடப்பட்டதாயிற்று. அதுவரையிலே அக்காட்சியைத் தரிசித்தவர்கள் எல்லாமாகப் 15 லட்சத்து 80 ஆயிரம்பேர். காட்சியால் கிடைத்தபணம் 12 லட்சம் ரூபா. சுவீப்திக்கெற்றுகள் விற்றுவந்தபணம் 18 லட்சம்ரூபா. காட்சியின்போது காணமற்போய்க் கண்டுபிடிக்கப்பட்டபிள்ளைகள் 761. இழந்தபோகப்பட்டுத் திரும்பவும்கண்டடைந்த பொருட்கள் 207.

* * *

## வேர்சேல்ஸ் மாளிகை

முன்னர் பிரான்சிய மன்னர்களின் வாசஸ்தலமாய் இருந்ததும், உலகின் மகாஅலங்காரமான மாளிகைகளில் ஒன்றுமாகிய வேர்சேல்ஸ்நகர் மாளிகை இடிந்துவிழக்கூடிய அபாயநிலையில் இருப்பதாலே அதைப் பாதுகாத்துவைப்பதற்காக 500 கோடி பிறாங் சேகரித்துஉதவுமாறு பிரான்சியமக்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள். முன்னூறுவருடங்களின்முன் கட்டப்பெற்றதும், பிரான்சின் மகாப்பெரிய கட்டிடமுமாகிய இந்தமாளிகையை வருடம்ஒன்றுக்கு இருபதுலட்சம் தரிசகர்கள் காட்சிபார்த்துச் செல்லுகின்றார்கள். இதுகட்டப்பட்டுள்ள இடத்தைத்தெரிவுசெய்து வேலையைத் தொடக்கியவர் 13-ம் லூயிஸ் அரசர். பின்னர் இதனைக் கட்டிமுடித்தவர் 15-ம் லூயிஸ்அரசர். இவர்அதிலே ஓர் அழகான நாடகாரங்கத்தை அமைத்தும், அதன்பாக்கத்திலே ஒரு மைல்நீளமான ஓர்பெரியகால்வாயை வெட்டுவித்தும், நந்தாவனங்களைத் திறந்தும் அதனைச் சிறப்பித்துவைத்தார்.


# விற்பனைக்கு இருக்கின்றன

## கத்தோலிக்கு கீர்த்தனைமாலை

PART 1.

லத்தீன் கீர்த்தனைகள்

பிரதிவிலை 2 ரூபா 25 சதம்

* * *

யேசுநாதரின் சுவிசேஷம்

அல்லது

நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை

Harmony of the Four Gospels

புதிதாக வெளிவந்திருக்கும் ஓர் அருமையான நூல்

பிரதிவிலை 2 ரூபா 95 சதம்

* * *

பூசை உதவிமந்திரம்—பிரதிவிலை சதம் 40

* * *

செபச்சேண்டு—பிரதிவிலை ரூபா 1

* * *

திவ்விய பூசையின் சாதாரண செபங்கள்—பிரதிவிலை சதம் 60

எல்லாவற்றிற்கும் தபாற்செலவு பிரத்தியேகம்

கிடைக்கும் இடம்:

மனேஜர்

**அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்**

யாழ்ப்பாணம்.


## உங்களுக்குத் தெரியுமா?

(1) எந்தவேதசாட்சிகளின் திருநாளிலே பூசையில் ஊதாவர்ணஉடுப்புகள் பாவிக்கப்படுகின்றன?

மார்கழிமாதம் 28-ந் திகதி மாசில்லாத குழந்தைகளின்திருநாளிலே

(2) பாப்பரசின் இராணுவசேவைப் படைவரிசைகளில் அதிகம் உயர்ந்தது எது?

"நோபிள்காட்ஸ்" எனஅறியப்படுகின்ற படைவரிசையே.

(3) பிரசித்திபெற்ற நாடகாசிரியரான வில்லியம் சேக்ஸ்பியர் ஆவர்கள் தமதுசீவியகாலத்திலே நாடகஒருத்தியைப் பார்த்திருப்பாரா?

இல்லை. ஏனெனில், அவர்காலத்திலே நாடகத்தில்லரும் பெண்களினிடமாகவும் ஆடவர்களே நாடகபாத்திரங்களாய் நடித்துவந்தார்கள்.

(4) வேர்னன் செசில் ஜோன்சன் என்பவரைப்பற்றி யாதுஅறிவீர்கள்?

இவர்தான் பிரஸ்தாபமாக அறியப்பெற்றுவந்த வண. வேர்னன் சுவாமியார். இவர் கீர்த்திவாய்ந்த அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்தசபைப் பிரசங்கிமார்களில்ஒருவர். 1929-ம் ஆண்டு மனந்திரும்பி வண. வின்சென்ற் மைக்காப்சுவாமியாரால் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பெற்றார். இவர் குருப்பட்டம்பெற்றுத் தமதுமுதற்திவ்வியபூசை நிறைவேற்றியதின்று இவர்எழுதிய "ஒரே தேவன், ஒரேவேதம்" என்ற நூலைவாசித்து மனந்திரும்பி அவருக்குக் கடமைப்பட்டிருந்த பேர்களிடமிருந்து 300 கடிதங்கள் இவருக்குக் கிடைக்கலாயின.

## கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த மகா ஞானவொடுக்கம்

வழமைப்பிரகாரம் இம்முறையும் கத்தோலிக்க ஆசிரியைகளின் மகாஞானவொடுக்கமானது இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர்மடத்தாபனத்தில் வரும் சித்திரைமாதம் 16-ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமாகி 20-4-52 காலை திவ்வியபூசையோடு முடிவடையும்.

விடுதியில் சகலவசதிகளும் அளிக்கப்படும். வாவிரும்புபவர்கள் நேரகாலத்துடன் சங். தாயாரவர்கட்கு அறிவிக்குமாறு கேட்கப்படுகின்றனர். ஆசிரியைகள் அல்லாத பெண்களும் பங்குபற்றுவதற்கு உத்தரவுண்டு. எனவே, தங்கள் ஆன்மலாபத்தை விரும்பும் எவரும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படியாக மிக வினயத்துடன் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

Rev. Mother Superior,
Holy Family Convent,
Ilavalai.

## அமெரிக்க சனநாயகக்கட்சி

அமெரிக்க ஐக்கியதேசத்திலுள்ள பிரதானகட்சிகளாகிய சனநாயகக்கட்சியும், குடியரசுக்கட்சியும் வருகிறஆடிமாதம் சிக்காகோநகரிலேகூடி அமெரிக்க ஜனதிபதித்தேர்தலுக்குத் தத்தம் அபேட்சகர்களைத் தெரிவுசெய்யவிருக்கின்றன. சனநாயகக்கட்சியின்சார்பாகத் திரும்பவும் தாம் அபேட்சகராக முன்வருவாராஎன்பதைத் திரு. ட்றூமன் அவர்கள் இம்மாதஇறுதியிலே அறிவிப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். அவர் முன்வருவாராயின் திரும்பவும் அவர் வெற்றிபெறுவாரென நிச்சயமாக நம்பப்படுகிறது. ஆனல், அவர் நின்றுகொண்டு தமதுகட்சியின் சார்பாய்த் தமதுபதிலாளிஒருவரைத் தெரிந்தெடுப்பாராயின் அதுஅதிர்ஷ்டம் திரு. பிறெட் வின்சன் அவர்களுக்கே அல்லாது இல்லினோயிஸ் நாட்டின் தேசாதிபதியான திரு. அட்லாய் ஸ்ரிவென்சன் என்பவருக்குக் கிடைக்கமாட்டாதாம். திரு. பிறெட் வின்சன்அவர்கள் தற்போது அமெரிக்க ஐக்கியதேச பிரதமந்தியரசராக விளங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்விய நற்கருணையின்பேரில்

## (திரிகோணமலை மேற்றிராணியாரின் தபசுகால நிருபம்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த ஒற்றுமையின் ஊற்றும் மூல காரணமும் கிறீஸ்துநாதரின்பலியாகிய திவ்வியபூசையே. மற்றவைகள்எல்லாம் சாதாரணமானவை. உதாரணமாக ஆர்ச்சியசிஷ்டரில்பத்தி புகழ்ச்சிக்குரியதாயினும், பூசையில்குறைந்தது. ஆர்ச்சியசிஷ்டர் தங்கள்மன்றாட்டினாலும் முன்மாதிரியாலும் சருவேசுரனைக்கிட்டிச்சேர உதவியாய்இருக்கின்றனர். பூசையோ சருவேசுரனோடு நம்மை இணைக்கின்றது. ஆதலால் திருச்சபையின் மெய்யானபிள்ளையுடையவும், கிறீஸ்துநாதரின் சீஷனுடையவும் அறிகுறி பூசையின்மட்டில் அவருக்குள்ளகவலையே. இலேசாக ஒருவர்ஞாயிற்றுக்கிழமையில்பூசையை இழக்கின்றனரா? அப்படியாயின் நோவனைகளுக்கும் சுற்றுப்பிரகாரங்களுக்கும் அவர் சமுகமளித்தாலும், அவர் பேரளவில் கத்தோலிக்கர். சாவானபாவத்தைவிலக்கும் நோக்கமாய்மாத்திரம் ஒருவர் பூசைகாண்கின்றனரா? அவ்விதமான ஒருவருக்கு கிறீஸ்துநாதரில் அற்பஅன்பு உண்டு. மேலும் அவரிடமிருந்து பெற்றவைகளுக்கும் பெறுகின்றவைகளுக்கும் செலுத்தப்படும் நன்றியும் அற்பமும் தகுதியற்றதுமானது. இதற்குமாறாய், பூசைப்பலிக்குச் சமுகமளித்தல் ஓர் உரிமையும் தயையும்என்று ஒருவர் நினைக்கின்றனரா? அடிக்கடியும் கூடுமானால் நாளாந்தமும் பூசைகாண்கின்றனரா? பூசைகாண்பதற்காகப் பரித்தியாகஞ்செய்ய ஆயத்தமாகவும், விருப்பமாகவும் இருக்கின்றனரா? அவரின் சீவியம் பூசையின்நோக்கத்துக்கு இணங்க எப்பொழுதும் கிறீஸ்துநாதரின்வழியாய் மோட்சபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்படுகின்றதா? அப்படிப்பட்ட ஒருவர் கிறீஸ்துநாதரைநேசித்து, அவருக்கு நன்றியுள்ளவராகவும் இருக்கின்றனர். இவர் திருச்சபையின் விசுவாசமுள்ளபிள்ளை. தனது நித்திய சீவியத்தின்மட்டில் கருத்தாயிருக்கின்றனர். இவரைச் சருவேசுரன்நேசித்து, ஆசீர்வதித்து, இவருக்குச் சன்மானமும் அளிக்கின்றனர். இம்மேற்றிராசனத்தின் விசுவாசிகள் மென்மேலும் இவ்விதம் சீவிப்பார்களாக.

இவ்வருடம் பார்சலோனுவில் நடைபெறும் பலதேசசம்பந்தமான சற்பிரசாதமகாநாடு திவ்வியதேவநற்கருணை எனும் அற்புதமான கொடைக்காக வெகுஆடம்பரமாய்ச் சருவேசுரனுக்கு நமதுநன்றியைச் செலுத்தும்படி ஓர்தருணத்தைத்தரும் நோக்கமுடையது. இந்தஆடம்பரமான நன்றி செலுத்துதலில் பங்குபற்றும்படி உலகின் கத்தோலிக்கர் எல்லோரும் அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு சாதியும், நமதுஇலங்கைதானும் தன் தன்பிரதிநிதிகளை அவ்விடத்துக்கு அனுப்புமென நம்புகிறோம். ஆனால், இந்த உரிமையைப்பெற நமதுமேற்றிராசனத்தால் முடியாமல் இருக்கலாம். என்றாலும், திருச்சபையின் நோக்கத்தின்படி, நாமும் அங்குபோக முடியாத அநேகருடன்சேர்ந்து உள்ளத்திலும், இருதயத்திலும் அங்கு கூடியிருக்கும் சனத்திரளோடு நம்மையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். சற்பிரசாதமகாநாடு நடக்கும்நாட்களில், நாமும் தூரத்தில் இருந்துகொண்டு நாம் இந்தஆயர்நிருபத்தில் குறித்துக்காட்டும்வண்ணம் சருவேசுரனின் இப்பெருங்கொடைக்காக அவருக்குச் செலுத்தப்படும் சருவநன்றியறிதலைச் செலுத்துவோம்.

சற்பிரசாதமகாநாடானது தேவநற்கருணையில் நமக்கிருக்கும் வணக்கத்தையும், அன்பையும், அறிவையும் அதிகரிக்கச்செய்யும் தருணத்தைத் தரும் நோக்கமுடையது. திவ்வியதேவநற்கருணை நமக்கு அவ்வளவுநன்மையைக் கொடுக்கக்கூடியதாய் இருப்பதால், இந்தஅரியதருணம்தரும் முழுப்பலன்களையும் நாம்அடையவேண்டும். ஆதலால், இம்மேற்றிராசனத்தில் 1952-ம் வருடம் தேவநறகருணைப்பத்திக்காக நியமிக்கப்பட்ட வருடம் என்று வெளிப்படுத்துகின்றோம். இவ்வருடத்தில் குருமாரும், சந்நியாசிகளும், விசுவாசிகளுமாகிய யாவரும் தேவநற்கருணைக்குரியவணக்கத்திலும், அன்பிலும், அறிவிலும் அதிகரிக்கும்படி வேண்டியபிரயாசப்பட வேண்டும். ஆதலால்நாம் பின்வரும்காரியங்களை விதிக்கின்றோம்:

1. தேவநற்கருணையின் பேரில் நமதுகோவில்களிலும், மற்றத்தாபனங்களிலும் தொடர்ச்சியான பிரசங்கங்கள் அல்லதுபோதனைகள் இருக்கவேண்டும். விசேஷமாய்த் திவ்விய பூசைப் பலியைப்பற்றி வற்புறுத்திப் பேசவேண்டும்.

2. (a) அடிக்கடி பூசைகாணும்படியும், (b) அடிக்கடி தேவநற்கருணை பெறும்படியும், (c) அடிக்கடி தேவநற்கருணை சந்தித்தலை ஊக்கப்படுத்திக் கத்தோலிக்கசேவைக் கூட்டங்களும், சங்கங்களும் விசேஷமுயற்சி செய்யவேண்டும்.

3. கட்டளைக்குருமாரும், தாபனங்களின் தலைவர்களும் (a) பலிபீடங்களையும் பலிபீடத்தலங்களையும் புனிதமாய்வைத்தும், (b) பூசைக்குதவும் பாலர்களை முறையாய்க்கற்பித்து, தூய உடுப்புக்களை அணியச்செய்தும், விசுவாசிகள் தேவநற்கருணையின்மட்டில் பத்தியிலும், அன்பிலும், வணக்கத்திலும்வளர உதவிபுரிவார்களாக.

4. சற்பிரசாதமகாநாடு நடைபெறும்நாட்களில் உள்ளத்திலும், இருதயத்திலும் அதில்சமுகமாய் இருந்து, அதின்ஆசீர்வாதங்களிலும் பங்குபெறும்தருணம் விசுவாசிகளுக்குக் கிடைக்கும்படி தினமும் தேவநற்கருணைஆசீர்வாதம் இருக்கவேண்டும். மேலும் இந்நாட்களில் எல்லோரும் சற்பிரசாதமகாநாட்டின் நன்முடிவுக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்களாக.

முடிவுரையாக, அன்பார்ந்தசகோதரரே, பிள்ளைகளே, சற்பிரசாதமகாநாட்டின் பிரதானகருத்தை உங்கள் பத்திக்குரிய கவனிப்புக்குத் தருகின்றோம்: இதுதான் "தேவநற்கருணையும் சமாதானமும்". தேவநற்கருணை சமாதானத்தின் மூலகாரணமென்பதைப்பற்றித் தர்க்கங்கள்நடத்தப்படும். தேவநற்கருணையின்வழியாய்ச் சமாதானம் கிடைக்கும்படி உருக்கமானமன்றாட்டுகள் செலுத்தப்படும்.

சமாதானமே நமக்கு அவசியம் வேண்டிய காரியம்என்று நமக்குத் தெரியும். நாம் அதைநன்றாய் அறிவோம். தேவநற்கருணையில்தான் வெகுவாய்விரும்பப்படும் இந்தச்சமாதானத்தைக் காணலாம்என்றும் தெளிவாய்அறிவோம். திவ்வியதேவநற்கருணையில் உண்மையாகவே யேசுக்கிறீஸ்துநாதர் எழுந்தருளிஇருக்கின்றனர். அவரே சமாதானத்தின்அரசன். மேலும், தேவநற்கருணை அன்பின் தேவதிரவியஅநுமானம். சமாதானம் அன்பினுடையவும், பிறர்சிநேகிதத்தினுடையவும் பலனாகும். எங்கு உள்ளத்தின், இருதயத்தின், முயற்சியின் ஒற்றுமைஉண்டோ, அங்குபிறர்சிநேகமும், அன்பும்உண்டு. தேவநற்கருணையைப் பார்க்கிலும் நம்மை வெகுஐக்கியமாய் இணைக்கக்கூடியதுஎன்ன? திவ்வியபூசைப்பலியானது நம்மெல்லோரையும் ஒரே விலும், ஒரேபலிப்பொருளிலும் இணைக்கவில்லையா? நாம் எங்கிருந்தாலும்சரி, என்னமாயிருந்தாலும்சரி, பூசையில் ஒன்றாகின்றோம்; ஒரேபலியைக் கவனிக்கும்மனதில் ஒன்றாகின்றோம்; ஒரேபலிப்பொருளோடு ஒப்புக்கொடுக்கப்படும் இருதயத்திலும், ஒன்றாகின்றோம்; ஒரேபலியைஒப்புக்கொடுத்து முயற்சியிலும்ஒன்றாகின்றோம். தேவநற்கருணை பெறும்பொழுது நமது ஒற்றுமை இன்னும்பூரணமாகின்றது. இந்தஒற்றுமை நாம்பரலோகத்தில் அநுபவிக்கஇருக்கும் ஒற்றுமையின் முன்உணர்ச்சி. நாமெல்லோரும் யேசுக்கிறீஸ்துநாதரோடு ஒன்றாகும்படியும், அவர்மூலமாய் நாம் நம்மில்ஒவ்வொருவரோடும் ஒன்றாகும்படியும், அவர்நம்மில் ஒவ்வொருவரிடமும்வந்து நம்மோடு ஒன்றாகின்றனர்.

ஆதலால், திவ்வியதேவநற்கருணை நம்மில் எவ்விதமாற்றத்தைச் செய்கின்றதோ, அவ்விதமாற்றத்தோடு நம்முடையசீவியங்களும் பொருந்தும்படி தெண்டிப்போமாக. சருவேசுரனின் வரப்பிரசாதத்தில் இருந்துகொண்டு, அவரோடு ஒற்றுமையாய் வாழ்வோமாக! ஒருவருக்கொருவர் மன்றாடிக்கொண்டும், ஒருவர்ஒருவரை மன்னித்துக்கொண்டும், ஒருவரோடொருவர் ஒத்துழைத்துக்கொண்டும், அதாவது, கிறீஸ்துவஅன்பின் பந்தனத்தில் ஒருவரோடொருவர் ஒற்றுமையாய் வாழ்வோமாக! இதற்குப்பின்தான் நம்முடைய செபத்தினாலும் நம்முடைய முன்மாதிரிகையாலும், சாதியாருக்கிடையிலும், நமதுதேசத்திலும் நமதுகுடும்பங்களிலும், நமது இருதயங்களிலும் சமாதானத்தைத் திரும்பவும் நிலைநிறுத்துவதில் நமக்குரிய பகுதியைச் செய்துமுடிக்கலாம். சருவேசுரன் நம்மெல்லோருக்கும் இந்த அருளைத்தரும்படி உருக்கமாய் மன்றாடி முடிக்கின்றோம். உங்கள் எல்லோரையும் சருவேசுரன் ஆசீர்வதிப்பாராக—ஆமென் யேசு.

### ஓர் செல்வவந்தர் அல்ல

சமீபத்திலே காலஞ்சென்ற ஆறுவது ஜோர்ஜ் அரசர் தமக்கு முன்னிருந்த அரசர்களில் பலரைப்போலவே ஓர் செல்வவந்தர் அல்ல. அவர் இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளின்முன் சிம்மாசனமேறியபோது பிரித்தானிய பாராளுமன்றம் அவர் செலவுக்கென வருடமொன்றுக்கு 4,10,000 பவுண் அனுமதித்தது. இது அவர் தந்தையாருக்குக் கொடுபட்டதிலும் 60,000 பவுண் குறைவானது. இற்றைக்கு நூறுவருடங்களின்முன் ஆட்சிசெய்த நான்காம் ஜோர்ஜ் அரசருக்குக் கொடுபட்டதொகையில் அரைவாசிவரையிலாகும். சென்றமகாயுத்தம் நடைபெற்றகாலத்திலே அரசர் தமது குடும்ப செலவுமட்டில் கடுமையான சிக்கனத்தைக் கையாண்டு சமாதானகாலத்திலும்பார்க்க வருடம் ஒன்றுக்கு 20,000 பவுண் மிச்சம்பிடிக்கக் கூடியவரானர். ஆனல், 1947-ம்ஆண்டு எலிசபேத் இளவரசியின் திருமணத்தின் போது தாம் சேமித்துவைத்த பணத்திலே ஒருலட்சம் பவுணைப் பிரித்தானிய திறைசேரிக்குக் கொடுத்துவிடலாயினர். தமது சிரேஷ்ட குமாரத்திக்கு அரசாங்கத்தால் வருடந்தோறும் கூட்டிக்கொடுபடும் செலவு தொகையைச் சமாளித்து, அதனல் அரசாங்கத்துக்கு மேலதிகமான செலவுபாரம் ஏற்படாதிருக்குமாறே அவர் அதைக் கொடுத்தனர். ஆனல், சென்றவருட ஆரம்பத்திலே அரசரின் செலவுகளில் ஒரு பகுதியை அதாவது வருடமொன்றுக்கு 40,000 பவுணை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அரசாங்கம் உதவிவந்த பணத்தைத்தவிர அவருக்குத் தமது பிதாவால் மரணசாதனமாகவிடப்பெற்ற பணத்திலிருந்தும், கமலங்களிலும், கைத்தொழிற் சாதனங்களிலிருந்தும் வருமானம் வந்துகொண்டிருந்தது.

## நாளுசங்கதிகள்

— வத்திக்கான் இராச்சியத்தின் கவர்னரான மாக்குயிஸ் கமில்லோ செருபினிபிரபு சென்ற 21-ந் திகதி வெள்ளிக்கிழமை காலஞ்செல்லலாயினரெனத் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. இவருக்குவயசு 87.

— பிரித்தானியிலே கட்டப்பெற்ற "கன்பெறு" ஜெற்வெடிகுண்டு விமானமொன்று பிரித்தானியிலிருந்து சென்ற 17-ந்திகதிபுறப்பட்டுப் 12,050 மைல்தூரத்தை 24மணி 20நிமிஷத்தில் தாண்டி ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த லெவேட்டான்நகர்போய்ச் சேரலாயிற்று. அதாவது இந்தவிமானம் நிமிஷமொன்றுக்கு 8மைலுக்குமேல் பறந்துசெல்லலாயிற்று. ஆனல், நடுஆகாயத்திலே ஓர்பறவையுடன் மோதியகாரணமாக அதன் எண்ணெய்த் தாங்கிஒன்றின் மூக்கு துகளாகியிருந்தது.

— இந்துசமுத்திரத்திலே இலங்கைக்கும், ஆஸ்திரேலியாவிற்கும் நடுமத்தியிலுள்ளதான கொக்கோஸ்தீவு தற்போது பெரும்புழக்கத்திற்கு வந்திருக்கிறது. ஆஸ்திரேலியாவுக்கும், தென்ஆபிரிக்காவிற்குமிடையே ஆரம்பமாகவிருக்கும் ஆகாயப்பிரயாணவிமானங்கள் தங்கிப்போகும்இடமாக அது தெரியப்பட்டிருக்கின்றது. தற்போது அதிலே 8,000அடிநீளமும், 150அடி அகலமுமான ஓர்விமானநிலையம் அமைக்கப்படுகின்றது.

— ரோமைநகரின் 127-வது விசாரணைப்பங்கு சென்றமாசிமாதம் 23-ந் திகதிஅமைக்கப்படலாயிற்று. அதன் பாதுகாவலராக ஆர்ச். ஐந்தாம்பத்திநாத பாப்பானவர் தெரியப்பெற்றிருக்கின்றார். இந்தவிசாரணைப்பங்கு சுமார் 15,000 கத்தோலிக்கமக்களை அடக்கியிருக்கின்றது.

— ஜேர்மனியிலே சென்றமகாயுத்தத்தின்போது ஐரோப்பாவில் மிக மோசமாகக் குண்டுமாரிபொழியப்பெற்ற கொலோன் நகரசங்கமானது யப்பானிலே அணுக்குண்டுவீசப்பெற்ற ஹிரோஷிமாநகரில் கட்டியெழுப்பப்படுகின்ற உலகசமாதான ஞாபக ஆலயத்திற்கு ஓர் அன்பளிப்பாக வாத்தியக்கருவிஒன்றை உபகரிக்க ஏகமனதாய்ச் சம்மதித்திருக்கின்றது. சமீபத்திலே ஹிரோஷிமாநகரின் அப்போஸ்தொலிக்க பரிபாலனரான யூஜி ஹாறுஆண்டவர் கொலோன்நகரைத் தரிசிக்கலாயினர்.

— சென்ற 1951-ம் ஆண்டிலே 80,000 பிணியாளர்கள் லூர்துதிருப்பதிக்குவந்திருப்பதாக அப்பதியின் மேற்றிராணியாரான தியாஸ்ஆண்டவர் தெரிவித்திருக்கின்றார். இவர்களுடன் 1,410 டக்றர்மாரும் சென்றிருந்தார்கள். டன்கேர்க்கிலிருந்து போன 500 யாத்திரிகர்களில்ஒருவர் அங்கு சிலுவைபபாதைசுற்றும்போது திரும்பவும் கண்பார்வை அடைந்துகொண்டார்.

— இங்கிலாந்திலே புறொட்டஸ்தாந்தபாதிரிமாராயிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேருகிறவர்களுக்கு உதவிசெய்வதற்கெனச் சென்ற 25வருடங்களிலும் அதற்குரிய சபையானது 2,50,000 பவுண் சேகரித்திருக்கிறது. தற்போது வருடம் ஒன்றுக்கு அச்சபைக்குத்தேவைப்படுகிறபணம் 20,000 பவுண். இதற்குக் காரணம் மனந்திரும்புகின்றபாதிரிமார்களினதும், அவர்கள் குடும்பங்களினதும்தொகை அதிகரித்துக்கொண்டு வருவதேயாகும்.

* * *

செபமாலை எங்களை யேசுநாதருடையவும், மரியம்மாளுடையவும் கூட்டத்தில் சருவேசுரனுடன் ஐக்கியமாகச் செய்கிறது. எங்கள் மனங்களில் அன்பு பெருகச்செய்கிறது. அவர்களுடன் சம்பாஷிக்கிறோம். அவர்களுடைய சிந்தனைகள், மனப்பான்மை இன்பங்கள், துன்பங்கள் யாவும் எம்முடையதாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணை சொல்வது

அருமைச் சகோதரங்களே!

இந்த உலக சீவியம் மறுமைச் சீவியத்திற்கு ஆயத்தம். உலக சீவியம் சொற்பகாலம். மறுமைச் சீவியம் முடிவில்லாத காலம். நித்திய சீவியத்திற்கு ஆயத்தப் படுத்தும்படிதான் தபசுகாலத்தை அனுசரிக்கிறோம்.

தபசுகாலம் முடிந்து உத்தானநாள் வரும். அதற்கு எங்கள் ஆத்துமத்தை ஆயத்தப் படுத்த வேணும். பழைய, பாவம் நிறைந்த சீவியமாயிராமல், புதிய, தேவனுக்கடுத்த, வரப்பிரசாத சீவியமாய் இருக்க வேண்டும்.

நீங்கள் எப்படி ஆயத்தப் படுகிறீர்கள்? புதிய சீவியமாக்க என்ன முயற்சி செய்கிறீர்கள் என்று எனக்கு எழுதுங்கள்.

நீங்கள் எழுதும் விஷயம் நூறுசொற்களுக்குள் அடங்கவேண்டும். திறமான விஷயத்திற்குப் பரிசு கிடைக்கும். உங்கள் முயற்சிகளை ஆவலுடன் எதிர்பார்க்கும்

உங்களன்புள்ள அண்ணை.

## காவற்சம்மனசு

1. சின்னச் சின்னச் சம்மனசே
தெய்வ உலகச் சம்மனசே
சின்னப் பிள்ளை என்னையே
தினமும் காக்கும் சம்மனசே

2. கடவுள் படைத்த சம்மனசே
காவல் செய்யும் சம்மனசே
காலை மாலை தவறாமல்
களிப்புடன் போற்றி வணங்கிடுவேன்

3. எனக்குக் குறித்த சம்மனசே
எனக்கு வெளிச்சம் தருவீரே
என்னை ஆண்டு நடத்திடுவீர்
என்னைக் காக்க வந்திடுவீர்

A. வென்செஸ்லஸ்
ஊர்காவற்றுறை மேற்கு

### அதுதான்நல்லது என்றகதைத்தொடர்பு

## 3-ம் பரிசு பெற்றது.

அவன் ஓரேஓட்டமாகத் தன்வீட்டினுள் நுழைந்தான். அங்கு இவனுடைய அண்ணையும் பிதாவும் பேசிக்கொண்டிருந்தனர். இவன் ஓடிவந்ததைக் கண்டு பயந்து இவன்தந்தை, என்ன தம்பி! என்ன நடந்தது? அக்கா எங்கே? என்று கேட்டார். அவன் பதில்சொல்ல முடியாமல் ஓடிவந்த களைப்பால் இளைத்துக் கொண்டு நின்றான். பின்தொடர்ந்து வந்த புஷ்பராணி, அப்பா மோதிரம் என்று கத்திக் கொண்டே உள்நுழைந்தாள். அப்போது அவன்தாய், என்ன தம்பி மோதிரம் என்றாள். அந்தநேரத்தில் சேகரன் தனக்கு மோதிரம் கிடைத்த வரலாற்றையும், அதில்உள்ள எழுத்தையும் கூறித் தகப்பனிடம் கொடுத்தான். தகப்பன் அதைவாங்கி நமக்கு நம் சருவேசுரன் 10 கற்பனையில் "பிறர் உடைமையை அபேட்சியா திருப்பாயாக" என்று சொல்லி இருக்கிறார். ஆதலால், நாம் இதை உடையவனிடம் கொடுப்பதே நலம் என்றார். அந்த நேரத்தில் தம்வீட்டுப் பக்கமாய் யாரோ வாய்விட்டுப் புலம்பிக் கொண்டு போகும் சத்தம் அவர் காதில் விழுந்தது. உடனே அவர் போய்ப் பார்த்தார். அது ஒரு பையன்தான். அவர் அவனைக் கூப்பிட்டு, ஏன் அழுகிறாய்? என்று வினவினார். அவன் தன் மோதிரத்தைக் காணவில்லை என்றும், அதில் S. A. எழுத்து இருக்கிறது என்றும், என் தந்தை தண்டிப்பார் என்பதை இட்டு அழுதுகொண்டு போகிறேன் என்றும் சொன்னான். இதைக் கேட்டு மனம்வருந்தித் தன்னிடம் சேகரன் கொடுத்த மோதிரம் அவனுடையது என்பதை அறிந்து அதைக் கொடுத்து கடவுளை நம்பினார் கைவிடப்படார் என்று சொல்லி இன்னும் புத்திமதிகளும் கூறி அனுப்பினார். அவ்விடம் சேகரனும் வந்து நின்றான். அவனைப் பார்த்து அவர் மோதிரத்தை உடையவனிடம் சேர்த்து விட்டேன் என்றார். அவனும் அதுதான் நல்லது என்றான். இதை இட்டு எல்லோரும் சந்தோஷப் பட்டனர்.

S. செபரெத்தினம்
கல்முனை

* * *

பிசாசு ஒரு ஆத்துமத்தைக் கெடுக்க விரும்பினால் அந்த ஆத்துமம் தேவதாயார் பேரில் பக்தி கொள்ளாதிருக்கச் செய்யும். (அர்ச். அல்போன்ஸ் லிகோரியார்)

> கோயிலுக்குள் கதைப்பது ஆண்டவருக்கு அநாசாரம், அயலானுக்குப் பராக்கு, எமக்குப் பயனற்றது.
>
> "என்வீடு செபத்தின் வீடு"

## அர்ச். கனிசியஸ் அருளப்பர்

கனிசியஸ் அருளப்பர் போலாந்து தேசத்தவர். கிறுக்கோ மேற்றிராசனத்தைச் சேர்ந்த கென்ரி என்னுமிடத்தில் 1412-ம் ஆண்டில் பிறந்தார்.

அர்ச். அருளப்பர் தமது ஆரம்பக் கல்வியைத் தம் சொந்த ஊரிலே கற்று வந்தார். அங்கு அவரிடம் விளங்கிய புத்திக்கூர்மையின் நிமித்தம் உயர்தரக் கல்விக்காகக் கிறுக்கோவிற்கு அனுப்பப் பட்டார். அருளப்பருடைய பெற்றோர் ஏழைகள். ஆயினும் மகன் படிப்பில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற ஆவல் நிறைந்தவர்கள். கஷ்டங்களைப் பாராமல் தங்களை ஒறுத்து, மகனுடைய படிப்பிற்கு வேண்டிய செலவு செய்தார்கள்.

சர்வகலாசாலையில் அவருடைய புத்திநுட்பத்தை அறிந்த ஆசிரியர் எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். சகலருடனும் இலகுவாகப் புழங்கும் தன்மையும், அவருடைய தாழ்மையும் அனைவரையும் கவர்ந்தன. தத்துவசாஸ்திரம், வேதசாஸ்திரம் முதலியவற்றை வெகுகீர்த்தியுடன் கற்றுப் பாண்டித்தியம் அடைந்தார். பின்பு அதே சர்வகலாசாலையில் சொற்பகாலம் பேராசிரியராகக் கடமையாற்றி வந்தார்.

### பங்குக்குரு

1440-இல் கிறுக்கோ மேற்றிராசனத்தில் ஒல்கூஸ் என்னும் இடத்திற்குப் பங்குக் குருவாக அனுப்பப்பட்டார் அருளப்பர். பங்குக்கடமைகளின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள அவர் மனம்ஒப்பவில்லை. மறைந்த, பொறுப்பற்ற ஆசிரியத் தொழில்தான் தமக்கு ஏற்றதென நினைத்தார். அப்படியே தமது அதிகாரிகளிடம் கேட்டுத் திரும்பவும் பேராசிரிய பதவி வகித்தார். வேதாகம சாஸ்திர ஆசிரியராய் மரணமட்டும் கடமையாற்றினார்.

தாழ்மையும், அன்பும் அருளப்பரிடம் விளங்கிய விசேஷ இலட்சணங்கள் என்று அவருடைய சரிதையை எழுதிய மிக்கேல் மியெக்கோவிற்று சொல்லியிருக்கிறார்.

பிறரைக் கவலைக்கு உள்ளாக்காதே; பின்பு பிரியப்படுத்துவது சுலபம்அல்ல. பிறர் மரியாதையைக் கெடாதே; கெடுத்தபின் கொடுப்பது கஷ்டம். இவை அருளப்பரின் சுலோகங்கள்.

அருளப்பர் பிறர்சிநேகத்தை அனுசரித்தார். தமது பணத்தையும், உடுபுடவையையும் வறியவர்களுக்குத் தானஞ் செய்வார். இல்லை என்னுமல் இருக்கும் வள்ளல் அவர். தமக்கு அவசியந் தேவையானவைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவை எல்லாவற்றையும் கொடுத்து விடுவார்.

### யாத்திரி

கனிசியஸ் சொற்பமாக நித்திரை செய்வார், குளிர் மிகுந்த தரையிற்தான். உணவையும் குறைத்து விடுவார். மாமிச உணவை முற்றுக விலக்கி வந்தார். நான்குமுறை ரோமைக்கும், ஒருதரம் ஜெருசலேமுக்கும், கால் நடையாகப் பிரயாணமாயினர். சீவிய காலத்திலும், மரணத்தின் பின்பும் அநேக அற்புதங்களைச் செய்தார்.

நாம் சிலவேளைகளில் தாழ்மையைக் கோழைத்தனம் என்றும், யாவருக்கும் அன்பு காட்டுவதை மடமைதனம் என்றும் எண்ணுகிறோம். இது பிழை என்பதை அர்ச். கனிசியஸ் அருளப்பருடைய சீவியத்தில் காண்கிறோம். அவர் தாழ்மை நிறைந்தும் ஆற்றலில் குன்றாமலும், அன்புகொண்டு ஒழுகியும், அறிவில் சிறந்தும் விளங்கினர்.

## நீங்களும் அப்படியா?

அர்ச். கனிசியஸ் கல்வியில் சிறந்தவர். ஆனால், அதையிட்டு ஆங்காரம் கொள்ளாமல் தாழ்மையுள்ளவராய் இருந்தார். நீங்கள்...?

பேச்சிலே மாத்திரம்அல்ல, அனுசரணையிலும் பிறர்சிநேகத்தை அனுசரித்துக் காண்பித்தார் அர்ச். அருளப்பர். வறியவர்களை நேசித்தார். தனக்கு நோகுமளவாகத் தானஞ் செய்தார். நீங்கள்...?

புவனமலரும், அவனுடைய சகோதரனும் கள்ளவறிஞனும் செபமாலை சொல்லத் தவறுவதில்லை. நீங்கள்...?

செபமாலைப் பழக்கத்தைக் கைவிட்டு விடுவதிலும் வேலையைக் கைவிட்டான் புவனத்தின் சகோதரன். நீங்கள்...?

## பெரிய இடத்துப் பிள்ளை

வழக்கம்போல் அன்று மாதா ஆலயத்தின் மணி "டாண் டாண் டாண் ...டாண்" என்று அடித்ததும் மக்கள்யாவரும் மகிழ்வுடனும், பக்தியுடனும் ஆலயத்தைநோக்கி விரைந்தனர். ஆனால், எப்போதும் மகிழ்வாகவும், குறும்பாகவும் இருக்கும் மாதவனின் முகம் அன்று கம்மென்று கறுத்திருந்தது. பாவம்! துக்கம்என்ற சொல்லையே அறியாதபிள்ளை; வட்டிக்கடை வரதனின் ஒரேகுமாரன் துக்கப்படுகிறானே! துக்கம் மாத்திரமன்றி அவன் உடம்பும் நடுங்குகிறதே! உடம்பில் ஒருவருத்தமுமில்லை. அவன் வாய் "சேகரன், அவன்போக்கிரி; குருவானவரின் ஆதரவில் வளர்ந்தாலும் அவன் பிறவிக்குணம் போகுமா? என்னை அவன் காட்டிக்கொடுத்து விட்டால்....." என்று ஆயிரம்தடவை ஆத்திரமாகக் கூறியது. அவன் இப்படிக் கூறிக்கொண்டிருக்கும்போதே அங்கு வந்துசேர்ந்தான் ஒருபையன். ஆம், அவன்தான் சேகரன். ஆயிரம் தடவை வைதுகொட்டிய சேகரன். மாதாகோவிற் குருவானவரின் ஆதரவில் வளர்ந்து அறிவாலும், குணத்தாலும், ஆற்றலாலும் தன்னிகரற்று விளங்கியவன். அவனைக்கண்டால் எப்படி இருக்கும் மாதவனுக்கு? கோபம் குன்றிலிழ் அருவிபோலப் பொத்துக்கொண்டு வந்தது.

அவனை அடித்து விரட்ட வேண்டுமென்று தோன்றியது மாதவனுக்கு. ஆனால், சேகரன் தந்தையிடம் சொல்லிவிடுவானே என்றபயம் அவனை அப்படியே இருக்கச் செய்துவிட்டது.

சேகரன் மாதவனின்கைகளை அன்புடன் பற்றிக்கொண்டு செவிக்குள் ஏதோ கூறினான். சிறிதுநேரம் யோசித்தபின் மாதவன் 'சரி' என்றான். இருவர்முகமும் மலர்ந்தன. உடனே வெளிக்கிளம்பினர்.

மாதவன் பணத்தால் செல்வனேயன்றிக் குணத்தாற் செல்வனல்லன். பேராசைபிடித்தவன். ஆசையின் காரணமாக அவன் அயலாரின் பொருட்களைக் கொள்ளைஅடிக்க ஆரம்பித்தான். இப்பொழுதும் அவன் துக்கத்துக்குக் காரணம் கொள்ளைதான். பாடசாலையில் அவன் களவாடிய தங்க மாலைதான் அக்கொள்ளை. சேகரன் இதைக் கண்டுகொண்டான். அதனாற்றான் மாதவன் அவனை வேதனைசெய்ய எண்ணினான். மாதவனும், சேகரனும் எல்லாவிதத்திலும் வடதுருவமும், தென்துருவமும் போன்றவர்கள்.

வெளிச்சென்ற இருவரும் மாதா ஆலயத்தை அடைந்தனர். மாதவன் குருவானவரிடம் தான்செய்த குற்றத்தைக் கூறி மாலையையும் கொடுத்து மன்னிப்பும் பெற்றான். சேகரன் மாதவனின் காதிற்குள்ளே சொல்லியது இதுதான்.

சகோதரரே! இப்போது சொல்லுங்கள். மாதாஆலயம் பெரியஇடமா? வட்டிக்கடை வரதனின் இல்லம் பெரியஇடமா? மாதவன் பெரியஇடத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### தபசுகால ஞானஒடுக்கம்

பரிசுத்த அடைக்கலமாதாகோவிலிலே தபசுகால ஞானஒடுக்கம் காலை 28-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகித் தபசுகால ஆரும் வெள்ளியாகிய வருகிற சித்திரைமாதம் 4—ந்திகதி வெள்ளிக்கிழமை மாலை கல்லறைத் திருச்சுரூப வணக்கத்துடன் கல்வாரியில்முடிவாகும். ஞானஒடுக்க நாட்களிலே தினமும் காலை 6 மணிக்கும், மாலை 7 மணிக்கும் பிரசங்கங்கள் நடைபெறும். மன்னர்க்கட்டளைக் குரவரும், மன்னர்-மாதோட்டப்பகுதி மூப்புச்சுவாமியாருமான அதிவண. எஸ். பிற்றர் சுவாமியவர்கள் ஞான ஒடுக்க போதகஞ் செய்வார்.

ஆசனக்கோவிலையும், சுண்டிக்குளி சஞ்சுவாம் கோவிலையும்சேர்ந்த ஆண் பாலாரின் தபசுகால ஞான ஒடுக்கம் அடுத்துவரும் 30-ந்திகதி ஞாயிற்றுக் கிழமைமாலை ஆரம்பமாகிச் சித்திரை 6-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலைமுடிவாகும். வண. பி. ஏ. அல்பிறெட்சுவாமியவர்கள் ஞானஒடுக்க போதகஞ்செய்ய விருக்கின்றார்.

### பொதுத்தேர்தல் ஆயத்தம்

பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு வசதியளிக்கும் நோக்கமாக வருகிறஜூனிமாதத்தில் நடைபெற வேண்டிய 240 கிராமச்சங்கங்களின் தேர்தல்கள் ஒருவருடத்துக்குப் பின் போடப்பட்டிருக்கின்றன. இன்னும் சுகாதார-ஸ்தலதாபன மந்திரியார் என்றமட்டிலே பிரதமர்அவர்கள் இவ்வருடம் நடைபெறவேண்டிய நகரசபைகள், பட்டினசங்கங்கள், சிறுபட்டினசங்கங்களின் தேர்தல்களையும் பின் போடவிருந்தாரெனத் தெரியவருகிறது. கொழும்பு, காலி, கண்டி, நீர்கொழும்புஆகிய நகரசபைகளினதும், ஒருபெருந்தொகையான பட்டினசங்கங்கள், சிறுபட்டினசங்கங்களினதும் தேர்தல்கள் இவ்வருடம்நிகழவேண்டியன. இவைகளெல்லாம் இப்போதைக்குப் பின்போடப்படும். அவ்வாறு பின்போடுவதாலே பாராளுமன்றப் பொதுத்தேர்தல் எத்தவேளையும் நடத்துவதற்கான வசதிகளைக் கொண்டதாகும். இன்னும் பொதுத் தேர்தல் முன்னர் எண்ணியிருந்தது போல ஒரேநாளில் நிகழமாட்டாதென்றும், முன்போல மூன்றுவாரங்கள் வரையில் நிகழுமென்றும் தற்போது தெளிவாகின்றது.

### காணியால் வந்தபிணக்கு

கம்பகாவிற்குச் சமீபமான மொகோலாஎனும் கிராமத்திலே சென்ற 17-ந் திகதிடன்று கிளாறூ ஹமினேஎனும் ஓர்மனுஷி இறந்து போக, அவள்பிரேதத்தைச் சேமக்காலைக்கு ஊர்வலமாகக் கொண்டுசெல்லும்போது அவளுக்குச் சொந்தமான ஓர்காணித்துண்டையிட்டு அவளின் இளசனருக்கும், பாடையைச்சுமந்து சென்றவர்களுக்குமிடையே வாக்குவாதம் ஏற்படவே, வாய்ச்சண்டை கைச்சண்டையில்முடிய, பாடையைத் தூக்கிச்சென்றவர்கள் பிரேதத்தைத் தெருவில்வைத்துவிட்டுத் தங்கள்பாட்டிலே போய்விட்டார்கள். காலஞ் சென்ற மனுஷியின்மகளான ஜன்கோ நோனுவும், மருகனனவில்லியம் சிங்கோவும், வேறுசிலரும் பாடையைத் தூக்கிச்சென்றவர்களை அடித்துத்தாக்கவே, பிரேதத்தைத் தெருவில்வைத்துவிட்டு இருகட்சியினரும் சண்டையிட்டார்கள். அதனால் எட்டுப்பேர் காயமடைந்து கம்பகாஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். வில்லியம்சிங்கோவும், அவன்மனைவியும், இருபுதல்வரும் பொலிசாரால் கைதுசெய்து காவல்வைக்கப்பட்டார்கள். பிரேதம் மூன்றுமணிநேரமாகத் தேடிவாரற்றுத் தெருவிலேவிடப்பட்டு அவ்வூர்க் கிராமத் தலைமைக்காரனால் அடக்கஞ்செய்யப்பட்டது.

## பாலர் பக்கம்

### பெரிய இடத்துப் பிள்ளை

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

துப் பிள்ளையா? சேகரன் பெரியஇடத்துப் பிள்ளையா?

மாதாவின் சன்னிதியைவிட இந்த உலகிற் பெரியஇடம் உண்டா? அங்கல்லவோ நாம் அருளென்னும் அளப்பரிய செல்வத்தை அடையமுடியும். பெரியஇடம் கோவில்தான். இந்தப் பெரியஇடத்தில் வளர்த்தவன் சேகரன். அவனுடைய உண்மைஉள்ளம் உலுத்தத்தனம்படைத்த மாதவனையும் உண்மைசொல்லத் தூண்டியது. ஆதலால் சேகரன்தான் பெரியஇடத்துப் பிள்ளை. பணக்காரர்களை நாம் பெரிய இடத்துப் பிள்ளைகள் என்று சொல்லலாகாது. குணக்காரர்களையே சொல்லவேண்டும்.

—கரம்

### மகாராணியாரின் செய்தி

"இலங்கைக்கு நீண்டகாலமாக அரும்பெரும் சேவைசெய்துவந்த பிரதமரின் மறைவைக்கேட்டு நாம் மிகவும் மனவருத்தமுற்றோம். துக்கத்தில் மூழ்கியிருக்கும் அவரதுகுடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எமதுஆழ்ந்த அனுதாபத்தைத் தயவுசெய்து தெரிவிக்கவும்" என்று இரண்டாவது எலிசபேத் மகாராணியார் சென்ற 22—ந்திகதி அனுதாபந்தெரிவித்து ஓர் தந்திச்செய்தி அனுப்பியிருந்தார்.

### கண்டனஞ் செய்கின்றர்

அக்குறெசா இடைத்தேர்தலிலே அபேட்சகர்களாக நிற்பாருள்ஒருவர் கம்யூனிஸ்தகட்சியின் தலைவரான டக்ற் எஸ். ஏ. விக்கிரமசிங்க என்பவர். அன்று வெலிகமத்திலே கமத்தொழில் மந்திரியார் திரு. டட்லி சேனநாயக அவர்கள்தலைமையில் நடைபெற்ற ஐக்கியதேசீயக் கட்சிக்கூட்டத்திலே திரு. டி. டி. வீரசேன அவர்கள் பேசியவிடத்துக் கூறியதாவது: "இங்நாட்டின்சுதந்திரத்திற்காக டக்ற் எஸ். ஏ. விக்கிரமசிங்க, டக்ற் என். எம். பெறேரு, டக்ற் கொல்வின் ஆர். டி. சில்வாமுதலிய பிரபல இடதுசாரித் தலைவர்களுடன் 15 வருடகாலம் தோளோடுதோள்நின்று வேலைசெய்தவர்களில் நானும்ஒருவன். ஆனால், இந்தத் தலைவர்களின் இருதயத்தில் பொறுமையும், துவேஷமும் குடிகொண்டுவிட்டன. அதனால்இவர்கள் வெவ்வேறுகட்சிகளாகப் பிரித்துவிட்டார்கள். தான் ஒருஏழையென்றும், ஏழைகளுக்கு உதவிசெய்வதே தனது நோக்கமென்றும் டக்ற் விக்கிரமசிங்க கூறுகின்றார். ஆனால், அவர் தனது சுயநலசண்முகளுக்கு உதவிசெய்ய முயற்சிக்கிறாரே அல்லாமல் ஏழைகளுக்கு உதவிசெய்ய முயற்சிக்கவில்லை."

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த பாத்திமாநாயகி, அர்ச். சூசையப்பர், கோடிஅற்புதர் (வகக்கோட்டை) அர்ச். அந்தோனியார் இவர்களிடம் நான்கேட்டமன்றாட்டுக் கிடைக்கப்பெற்றபடியால் கோர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவர்களின்நாமங்கள் எங்கும் புகழப்படுவதாக.

பீற்றர் ஹில் எஸ்ரேற் வ. சேவியர்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பாத்திமா செபமாலைமாதா, அர்ச். சூசையப்பர், கோடியற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். பிரான்சீஸ் சவேரியார், மற்றும் அர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டினால் என்னைப் பீடித்துவருத்தியபிணிகள் குணமாயின. எப்போதும் இவர்களின்தயவு கிடைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

V. R.

# திவ்விய கர்த்தர் கோவில்

பரப்புக்கடந்தான் திவ்வியகர்த்தர் கோவில் திருநாளை அதிக பக்திஅருட்சியுடன் கொண்டாடவரும்படி கர்த்தரின்பக்தர்களை அழைக்கிறோம்.

**6-ம் வெள்ளி — சித்திரை 4-ந் திகதி**

மு. ப. 8 மணிக்குப் பாடற்பூசை.

பி. ப. 2 மணிதுவக்கம் திருப்பாடுகளின் பிரசங்கமும், காட்சியும்.

பி. ப. 5 மணிக்குத் திருமணித்தியாலமும், ஆசீர்வாதமும்.

மூன்றிய மூன்றுதினங்களிலும் பாஸ்குக்கடமையை நிறைவேற்ற இலேசாயிருக்கும்படி குருவானவர் திரிதினஆராதனைப் பிரசங்கங்கள் செய்வார். ஒலிபரப்பும்கருவி நன்கு உதவியாயிருக்கும்.

கட்டளைக்குரவர்

## சுற்றுப்பிரயாணம்

நாக்களி, கத்தோலிக்க பாடசாலை ஆசிரியரும், மாணவரும், கிராம முன்னேற்றசங்க அங்கத்தவருமாகச் சுமார் 75 பேர் அநுபவவாயிலாய் அறிவைப் பெறும்நோக்கமாகக் கடந்த 14-3-52 வெள்ளிக்கிழமைகாலை 8 மணிக்குப் பாடசாலையினின்றும் இரு மோட்டர் ரதங்களில் சுற்றுப்பிரயாணமாகப் புறப்பட்டனர். இருபுறமும் தென்னந்தோப்புகள்செறிந்த பாதையினூடாகச்சென்று புத்தளம், சிலாபம் ஆகிய பட்டினங்களைக்கடந்து கொச்சிக்கடையைச்சேர்ந்த தூவணையென்னும் கிராமத்திலுள்ள கம்மல்துறை, அரசினர் தமிழ்ப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஏ. எல். பொன்னம்டோ அவர்களின் இல்லத்தில் தரித்தனர். அங்கே அவர்குடும்பத்தினரால் தயாரிக்கப்பட்ட பரிமளிப்பான பகற்போசனத்தைப் பந்தியமர்ந்து புசித்தபின் பிற்பகல் 2 மணியளவில் மீண்டும்பிரயாணத்தைத்தொடர்ந்து இனியகானங்கள்இசைத்துக்கொண்டு நீர்கொழும்பு, ஜாயெல, கந்தானைமுதலிய பட்டினங்கள்கண்டு களனியாற்றுப் பாலத்தினூடாகக் கொழும்புமாநகருள் பிரவேசித்து அதன்வனப்பை நோக்கியவண்ணம் "கொழும்புத்திட்டப் பொருட்காட்சி" நடைபெற்ற இடத்தை யடைந்து சிறிது சிரமபரிகாரம் செய்தபின் அனைவரும் பொருட்காட்சிமைதானத்துள் பிரவேசித்தனர். இலட்சக்கணக்கான பலவர்ணமின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு இந்திரலோகம்போல் காட்சியளித்த அம்மைதானத்திலே திறந்தவெளி நாடகமேடையில் நடைபெற்ற நடனங்கள், சினிமாப்படக்காட்சிகள், மற்றும் களியாட்டுக்களைக் கண்டுகளித்தனர். அத்துடன் இலங்கைஅரசாங்கமும், ஏனைய நேழைத்தேய, மேலைத்தேய அரசாங்கங்களும் பெருமுயற்சியுடன் தேடித்திரட்டி வரிசைக்கிரமமான மண்டபங்களில் காட்சிக்கு வைத்திருந்த பலவித அதிசயபொருட்களையும், கடந்தகாலத்தில் செய்துமுடித்தவையும், எதிர்காலத்தில் செய்யவிருப்பனவுமான அபிவிருத்தித் திட்ட மாதிரிஉருவங்களையும், யந்திரசாதனங்கள், மற்றும் அபூர்வவஸ்துக்களையும் சுற்றிப்பார்வையிட்டுக் காட்சியையிழந்து பாராட்டிக்கொண்டே மேட்டுத்தெருவிலுள்ள அர்ச். லூசியம்மாள் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தையடைந்து தலைமை ஆசிரியர் திரு. ஸ்ரனிப் பெறேரூவும், அவரின் உதவிஆசிரியர்களும் சித்தம்பண்ணிய இடத்தில்தங்கி இராப்போசனத்தை முடித்துக்கொண்டு ஆடுத்தநாள் சனிக்கிழமைகாலை திரும்பவும்பிரயாணத்தை ஆரம்பித்துக் கப்பல்துறைமுகம், நூதனசாலை, பாராளுமன்றக் கட்டிடம், இராணிமாளிகைமுதலாம்முக்கியமான இடங்களைப் பார்வையிட்டுப் பம்பலப்பிட்டித் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்தனர். அங்கு அம்மடத்தைச்சேர்ந்த தமிழ்ப்பாடசாலைத் தலைமைஆசிரியை சங. சகோதரி மேரி திறினிற்றியும், ஏனையசகோதரிகளும் தயார்செய்த காலைப்போசனம் அருந்தியபின்னர் ரத்மலானை விமானநிலையஞ் சென்று, அங்கே சகலரும் விமானநிலையக்காட்சிகளைப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்க, ஆசிரியர்களும், மற்றும்சிலருமாக விமானத்திலேறி உல்லாசப் பிரயாணஞ் செய்து கொழும்புகடைச்சுற்றிப் பார்வையிட்டுக்கொண்டு கால்மணி நேரத்தில் வந்திறங்கினர். பின்பு அனைவரும் வெள்ளவத்தை சென்று அங்குள்ள "ஆரிய சிங்கள" போசனசாலையில் பகற்போசனஞ்செய்து, பிரயாணத்தைத்தொடர்ந்து கொழும்புமாநகரில் மிகுதியாயுள்ள பிரதான இடங்களைப் பார்வையிட்டு முகமத்தை வந்தடைந்தனர். அங்கு தேவத்தைப் பதியிலுள்ள அர்ச். லூர்துநாயகியின் யாத்திரைஸ்தலஞ்சென்று செபித்த பின் அனைவரும்புறப்பட்டு இனிய கானங்களை இசைத்துக்கொண்டு இரவிரவாய்ப் பிரயாணஞ்செய்து அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமைகாலை நாக்களிப்பாடசாலை வந்துசேர்ந்ததும் ஆனந்தமானசுற்றுப்பிரயாணம் முற்றுப்பெற்றது.

— நிருபர்

## CEYLON GOVERNMENT RAILWAY

### Level Crossing Repairs

The following Level Crossings will be closed to vehicular traffic during the periods stated below for effecting repairs :-

(1) **The Level Crossing at 31 miles 01 chains H. L. on the Negombo-Mirigama Road between Mirigama and Ambepussa Stations.**

Partially from 7-0 a. m. to 8-45 a. m. and 12-15 p. m. to 4-0 p. m. on Sunday, 6-4-52.

Totally from 8-45 a. m. to 12-15 p.m. on Sunday, 6-4-52.

During the period of total closure traffic from Negombo to Mirigama and *vice versa* may proceed *via* Giriulla: Divulapitiya or Pallewela.

(2) **The Level Crossing at 84 miles 41½ chains on the Ahangama-Imaduwa Road between Talpe and Ahangama Stations, Coast Line.**

Total closure from 10-0 p. m. on Wednesday, 9-4-52.

During this period the traffic will be diverted through the turn offs to Welhengoda and Ahangankande roads respectively.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 27-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org